# பாட்டாளி சிந்தனை

Volume 26 No. 2

October 2015

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


# மேற்கு ஆசியாவின் புலம்பெயர்வு சோகப் பிரச்சினை

துருக்கி கடற்கரையோரம் ஒதுங்கிய சிவப்பு டி–சர்ட்டும் நீல நிறக் கால்சட்டையும் அணிந்த மூன்றே வயதான சிரியா நாட்டின் குழந்தையின் உயிரற்ற உடலைக் கண்டு ஒட்டுமொத்த உலகமும் அதிர்ச்சியில் உறைந்தது. அவனது மௌனமான உடலின் கதறல் போரின் கோரத்தையும் மத்தியத் தரைக்கடல் பகுதியில் நடைபெற்றுவரும் இடம் பெயர்வின் இன்னல்களையும் வெளிக்கொணர்ந் துள்ளது.

வறுமையின் வாட்டத்தில் எலும்பும் தோலுமாக நிர்க்கதியாக நின்ற சூடானிய குழந்தையின் பின்னால் ஒரு பிணந்தின்னிக் கழுகு நிற்கும் புகைப்படமும் வியட்நாம் மீது அமெரிக்கா நபாம் குண்டுகளை வீசித் தாக்கியபோது, பான் தி கிம் புக் என்ற இளம் பெண், அவரது தோல்கள் உரிந்த நிலையில் ஓடிய காட்சிகள் போன்றவைகளைக் கண்டு உலகம் முழுவதுமுள்ள மக்கள் அதிர்ச்சியில் உறைந்தது போன்ற கோரச் சம்பவங்கள் தங்களது நாட்டிலேயே நடைபெற்றது போன்று எண்ணி சிரியா நாட்டு மக்கள் நொறுங்கிப்போயுள்ளனர். வியட்நாம், சூடான், சோமாலியா, கம்போடியா, எத்தியோப்பியா இன்னும் இதுபோன்று மற்ற நாடுகளைச் சின்னாபின்ன மாக்கி சிதைத்துக் கொள்ளையடித்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான போர்–வெறி பிடித்த உலக ஏகாதிபத்திய முதலைகள் தற்போது ஒட்டுமொத்த மேற்கு ஆசியாவையும் வேட்டையாடி வருகின்றனர். முழுவீச்சிலான ராணுவத் தாக்கு தல்கள் முதல், உள்ளூர் மற்றும் பகுதி அளவு போர்கள் தொடுத்தல், தங்களது நயவஞ்சக சூழ்ச்சி களை கட்டவிழ்த்துவிட்டு, ஆசை வார்த்தைகளைக் காட்டி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி, பொம்மை அரசாங்கத்தை நிறுவுதல், ஒரு தரப்பு மக்களுக்கு எதிராக மற்றொரு தரப்பினரைத் தூண்டி மோத விடுதல் – இந்த அனைத்தும் அவர்களது மேற்கு ஆசியக் கொள்கையில் அடங்கியுள்ளது. அச்சுறுத் தலை ஏற்படுத்தும் இவர்களது கொள்கைகளால், ஜனநாயக விரோத அடிப்படைவாத சக்திகள் தங்களது கோரமான தலையை உயர்த்துகின்றனர், மூர்க்கத்தனமான புத்திகெட்ட அதோடு எவ்வித மனித உணர்வும் இல்லாத வன்முறையையும் தீவிர வாதத் தாக்குதல்களையும் கட்டவிழ்த்துவிடுகின்றனர். இதனால் சிரியா, லிபியா, சூடான், ஆஃப்கானிஸ் தான் இன்னும் இதுபோன்ற பலநாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் தாய்நாடுகளை விட்டு தப்பித்து வெளியேறி வசிக்க இருப்பிடம் தேடி அல்ல ஆனால் தங்களது உயிர்களைப் பாதுகாப்பதற்காக தப்பித்து வருகின்றனர். இவர்களெல்லாம் இறையாண்மையுள்ள தேசிய அரசுகளின் குடிமக்கள் ஆவர். ஆனால் இன்று அவர்கள் எல்லாம் ஒரே இரவில், புலம்பெயர்ந்தவர் களாக அல்லது அகதிகளாக மாறி உயிர்வாழ்வ தற்காக வேறு நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

### ஏன் இந்த புலம்பெயர்வு?

கரை ஒதுங்கும் குழந்தையின் உடல் மற்றும் மூழ்கும் படகுகள் போன்ற நமது மனதை அசைக் கும் புகைப்படங்களையும், நிரம்பி வழியும் வாகனங் களிலும் ஆயிரக்கணக்கானோர் எப்படி ரயில் நிலை யங்களிலும் சாலை ஓரங்களிலும் திக்கற்று நிர்க்கதி யாக நிற்கின்றனர் என்ற கதைகளையும் ஊடகங்கள் விவரித்து வருகின்றன. 'மனித நேயமிக்க' ஐரோப்பிய நாடுகளில் எந்த நாடு எவ்வளவு அகதிகளை ஏற்றுக் கொள்ள முடியும் என்ற கதைகளையும் பரப்பி வருகின்றனர். ஆனால் இப்படி புகலிடம் தேடி பெரு வாரியான மக்கள் அலைவதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி வாய்திறக்க மறுக்கின்றனர்.

ஆனால், நமது கேள்வி என்னவெனில், ஏன் இந்த துயர சம்பவங்கள் நடைபெறுகின்றன? தங்களுடைய இல்லங்களையும் வசிப்பிடங்களையும் விட்டு வெளி யேறி தங்களது நிலங்களை அல்லது தொழிற்சாலை களையும் காலி செய்துவிட்டு நாதியின்றி அகதி களாக வெளியேறிச் செல்வதற்கு எது தள்ளியது? அவர்களெல்லாம் வெள்ளம், வறட்சி அல்லது எரிமலைச் சீற்றம் போன்ற எந்த இயற்கைப் பேரழிவு களாலும் பாதிக்கப்படவில்லை. பின் எதற்காக இந்த இடம்பெயர்வும் புலம்பெயர்வும்? அப்பட்டமாக தெரியும் சம்பவங்களை உன்னிப்பாகப் பார்த்தால், ஏகாதிபத்திய மரண வியாபாரிகள் குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், வல்லாதிக்கம், வளங்களைக் கொள்ளையடித்தல் மற்றும் போர் வெறித் தாக்குதல்கள்மூலமாக தங்களது ஆதிக்க வட்டத்தை விரிவுபடுத்தவேண்டும் என்ற தீயநோக்க திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வரலாறு காணாத காட்டுமிராண்டித்தனத்தை இப்பிராந்தியங்களில் கட்டவிழ்த்து விட்டுள்ளதே இம்மக்களெல்லாம் தங்களது தாய்நாட்டை காலிசெய்துவிட்டு தப்பித்து வெளியேறி தஞ்சமடைவதற்குக் காரணம் என்பதே உண்மையாகும்.

இந்த மேற்கு ஆசிய நாடுகளில் உள்ள எண்ணெய் மற்றும் இதர இயற்கை வளங்களின் மீது தங்களின் உறுதியான பிடியை உருவாக்குவதற்காக துப்பாக்கி ஆயுதங்களோடு சுற்றிவரும் பென்டகன் சூத்திரதாரி களும் அவர்களது கூட்டாளிகளும் இந்த நாடுகளில் போர்களை நடத்துவதோடு இப்பிராந்தியங்களில் பதற்றத்தையும் அச்ச மனப்பான்மையையும் உருவாக்கி பிரிவினைவாத, பகைமைவாத, தேசிய மற்றும் மதப்பிரிவினைகளைத் தூண்டிவிட்டு ஒடுக்கப்பட்ட மக்களை ஒருவருக்கொருவர் மோதலில் ஈடுபடவைத்து வருகின்றனர். இதன்மூலம் ஏகாதிபத்தியங்களின் நடவடிக்கைகளுக்கும் கொலை வெறித் தாக்குதல்களுக்கும் எதிராக ஒன்றுபட வாய்ப்பில்லாத சூழலை உருவாக்கி வருகின்றனர். பின் போகப்போக, தீய எண்ணம் கொண்ட வெறிபிடித்தவர்களை உருவாக்குகின்றனர், தற்போது

தொடர்ச்சி 2ம் பக்கம்

## செப்டம்பர் 2 அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்ததற்காக தோழர் பிரவாஸ் கோஷ் அவர்களுக்கு மக்களுக்கு வாழ்த்து

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் செப் 2, 2015 அன்று வெளியிட்ட அறிக்கையில் மத்திய தொழிற்சங்கங்களால் அழைப்பு விடுக்கப்பட்ட அகில இந்திய பொது வேலைநிறுத்தத்தை மாபெரும் வெற்றிபெறச் செய்தமைக்காக இந்திய உழைக்கும் மக்களுக்கு தன் இதயபூர்வமான பாராட்டுதல்களை தெரிவித்தார்.

மேலும் அவர், இவ்வெற்றியானது மோடி அரசாங்கத்தினுடைய மோசமான ஆட்சிக்கெதிராக மக்களின் கோபத்தை ஒன்றுகுவிந்து வெளிப்படுத்துகிறது எனவும் கூறினார். கோரிக்கைகள் வென்றெடுக்கப் படும்வரை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வெகுஜன போராட்டங்களை தொடர்ந்து நடத்தும் எனவும் அவர் உறுதிகூறினார்.

## செப்டம்பர் 2 அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தையொட்டி மத்திய தொழிற்சங்கங்கள் தமிழ்நாட்டில் நடத்திய போராட்ட இயக்கங்கள்



சென்னையில் சென்டரல் இரயில் நிலையம் முன்பு அனைத்துத் தொழிற்சங்கங்கள் இணைந்து ஆர்ப்பாட்டம்.




தேனியில் ஏஐயுடியுசியின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் தோழர் சத்தியமூர்த்தி உரையாற்றுகிறார்.



சேலத்தில் அனைத்துத் தொழிற்சங்கங்களுடன் இணைந்து ஏஐகேகேஎம்எஸ் சாலை மறியலில் பங்கெடுத்தது. கடலூர், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியிலும் போராட்ட இயக்கங்கள் நடைபெற்றன.

# போர் அகதிகள் ஆயிரக்கணக்கில் பெருகக் காரணம் யுஎஸ்–ஆல் தூண்டிவிடப்பட்ட போர்கள், பசிப்பிணியை வளர்க்கும் பொருளாதாரத் தடைகள் மற்றும் திட்டமிட்ட நிலைதடுமாறச் செய்தலே

1ம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள்தான் அனைவரையும் சின்னாபின்னப் படுத்துகின்றனர், வெறுமனே வன்முறைகள் மட்டுமல்ல அடர்ந்த காடுகளிலே வாழும் மிகவும் அபாயகரமான மிருகங்களை எல்லாம் மிஞ்சும் வகையில் கொலைவெறித் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

### அமெரிக்க ஏகாதிபத்தியம் முதலில் ஆஃப்கானிஸ்தானைக் குறிவைத்தது

தற்போது நாம் பார்ப்பதைப் போன்று, போரால் சின்னாபின்னமாகிவரும் சிரியா, ஆஃப்கானிஸ்தான், லிபியா மற்றும் தெற்கு சூடான் நாடுகளிலிருந்து மிகப்பெரிய எண்ணிக்கையில் அகதிகள் வெளியேறிவருகின்றனர். ஆஃப்கானிஸ்தானில் சர்வாதிகார மன்னராட்சியை தூக்கியெறிந்த 1978 சௌர் புரட்சிக்கு பின்பு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் புரட்சியை அழிக்கவும் சோவியத்யூனியனின் தாக்கத்தில் இருந்து குறிப்பாக சோசலிசத்தின் தாக்கத்தில் இருந்து அந்நாட்டை விடுவிப்பதற்காக நயவஞ்சக சிஐஏவைக் களத்தில் இறக்கி விட்டது. சௌர் புரட்சியாளர்களுக்கு எதிராக மற்றும் நிலப்பிரபுக்களுக்கு 3 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான நிதியை வழங்கியது. மக்களின் ஏழ்மை நிலையை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஏற்கனவே இருந்த மத பழமைவாதிகள் தங்களது தலையை உயர்த்தினர், அதிகாரத்தின் தலைமைக்கு வந்தனர். 70களின் இறுதியில் சிஐஏ மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் நேரடியான மற்றும் மறைமுகமான உதவிகள் மூலம் இஸ்லாமிய பழமைவாத குழுக்களின் கூட்டணி, முஜாகிதீன், உருவானது. இறுதியாக, சிஐஏவின் ஆவணங்களில் கூறப்பட்டுள்ளது போல, சோவியத்–ஆதரவு ஆட்சியாளர்களுக்கு எதிரானவர்களுக்கு அமெரிக்காவின் ரகசிய உதவி வழங்குவது 1979இல் தொடங்கியது. போர் பிரபுகளுக்கிடையேயும் (War Lords) அதேபோல் முஜாகிதீனின் பல்வேறு பிரிவினர்களுக்கு இடையேயும் சண்டையை மூட்டிவிட்டு அவர்கள் சண்டையிடுவதற்காக போதிய ஆயுதங்கள், பணம் மற்றும் எதிரிகளின் இருப்பிடங்கள் குறித்த உளவுத் தகவல்களையும் சிஐஏவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் தாராளமாக வழங்கினர். கூடவே, முற்றிலும் பிற்போக்குவாத, ஆதிக்க வெறிபிடித்த கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளின் அடிப்படையில் உருவான பிற்போக்குவாத இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பான அல் கொய்தா, 1988இல் பின்லேடனின் தலைமையில் உருவானது. இது முழுக்கமுழுக்க அமெரிக்க ஆட்சியாளர்களுக்குத் தெரிந்தே நடைபெற்றது. அதோடு சவுதி அரேபியா மற்றும் அமெரிக்காவின் நிதி உதவியோடு இயங்கியது. அது சிஐஏ உடன் நெருக்கமான உறவை வைத்திருந்தது. மதத்தின் பெயரால், அது அனைத்து விதமான முற்போக்கு சிந்தனைகளையும் அழித்தது, தனது கருத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் அனைவரையும் அழித்தொழித்தது. சொல்லப்போனால், அமெரிக்க ஆட்சியாளர்களும் சிஐஏவும் சோவியத் எதிர்ப்பு பிரச்சாரத்தை ஆஃப்கானிஸ்தானில் தூண்டிவிடுவதற்காக இந்த அபாயகரமான சக்தியை, அதற்கும் மேலாக முஜாகிதீன்களையும் இதர அடிப்படைவாத சக்திகளையும் வெட்கமின்றி பயன்படுத்திக் கொண்டனர்.

ஆனால், இதன்தொடர்ச்சியாக போர்பிரபுக்களிடையே கொடூரமான அதிகாரச் சண்டை தொடங்கியது, அது ஆயிரக்கணக்கான ஆஃப்கானியர்களைக் கொன்றது, நூறாயிரக்கணக்கானவர்களை அகதிகள் முகாமிற்கு துரத்தியது, அரசியல் குழப்பத்தை உருவாக்கியது, வெளியேறி இருந்த லட்சக்கணக்கானவர்களை திரும்பவருவதற்கு முட்டுக்கட்டையானது. நாட்டின் பிற பகுதிகள் சிதறுண்டு உள்ளூர் நாசகார போர்பிரபுக்களின் ஆதிக்கத்தின் கீழான தனித்தனி சிறு பகுதிகளாக மாறின. இத்தகைய அவலமான சூழ்நிலைமையில் 1994இல் தலிபான் தீவிரவாதப்படை, இதுவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆசியோடும், ஆதரவோடும், உருவானது. அல்கொய்தாவின் அடக்குமுறைகளுக்கு ஏற்ற அடிப்படைவாத சுரத்திற்கு தாலிபான்கள் கச்சிதமாக பொருந்தினர். பின்னர், தாலிபான்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த உடன், இந்த இரண்டு நாசகார அடிப்படைவாத அமைப்புகளும் தங்களுக்கிடையே கச்சிதமான புரிதலை வைத்துக்கொண்டு இணைந்து செயல்பட்டனர், எந்தவொரு சுதந்திரமான கருத்துக்கள் வெளியாவதையும், ஜனநாயக அமைப்புகள் மற்றும் நடவடிக்கைகளையும் மறுத்தனர், அதோடு தங்களது ஆட்சிக்கு குருட்டுத்தனமாக கேள்வியே எழுப்பாமல் அடிபணிந்து நடக்க வேண்டும் என்று பணித்தனர்.

அதன்பின்னர் லாபவெறிபிடித்த, அதிகாரப் பசியெடுத்த ஏகாதிபத்தியங்கள், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலைமையில், தங்களது நவீன–காலனியாதிக்கச் சுரண்டலை எண்ணெய் மற்றும் எரிவாயு வளம் அரசியல் ராஜதந்திர கேந்திரங்களாகவும் இருந்த மத்திய கிழக்கு இஸ்லாமிய நாடுகளின் மீது இஸ்லாமிய–எதிர்ப்பு யூதவெறி இஸ்ரேலின் உதவியுடன் தொடங்கினர். அதோடு பாலஸ்தீனம் உள்ளிட்ட இந்த மத்திய கிழக்கு அரபு நாடுகளை அடக்கி ஆள அவற்றின்மீது கொடூரமான தாக்குதல்களையும் தொடுத்தனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதி மற்றும் தாக்குதலுக்கு எதிராக முஸ்லீம் ஆதிக்கமுள்ள இந்த நாடுகளின் மக்களிடையே வலுவான மக்கள் கருத்துக்களும் உணர்வும் மேலோங்கத் தொடங்கியது. இந்த பெருகிவரும் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பிய அல்கொய்தா முன்னிலைக்கு வந்தது. ஒருகாலத்தில் அமெரிக்க ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட அல்கொய்தா, பின்னர் அமெரிக்காவிற்கு எதிராகத் திரும்பியது, வரம் கொடுத்தவன் மீதே பாய்ந்தது. அல்கொய்தாவின் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற பெயரில் ஆஃப்கானிஸ்தான் மீது அமெரிக்கா ராணுவத்தாக்குதல் தொடுத்தது. ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்டு பொருளாதாரம் சிதிலமடைந்த நாட்டை மேலும் அழித்தது, எதிர்தாக்குதல் தொடுக்க இயலாத ஆஃப்கன் மக்கள் மீது கொடூரமான கொலைவெறித் தாக்குதலை நடத்தியது. இதை மூடி மறைப்பதற்காக அந்த நாட்டில் அவர்கள் ஒரு பொம்மை அரசாங்கத்தை நிறுவினர். அங்கே ஒரு பொம்மை அரசாங்கத்தை ஏற்படுத்தி தொடர்ச்சியாக தங்களது ராணுவத்தைக் குவித்து இன்றுவரை தாக்குதல்களை நடத்திவருகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள்தான் ஒவ்வொரு நாட்டிலும் மிகவும் மோசமான தீவிரவாதத் தாக்குதல்களைத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர். அடிப்படைவாதிகளை உருவாக்குவதும், ஊக்குவிப்பதும், ஆதரவு தெரிவித்து வளர்த்தெடுப்பதும் அவர்கள்தான், அதன் பின்னர் பயங்கரவாதத்தை முறியடிக்கிறோம் என்ற பெயரில் அந்த நாடுகள் மீது கொடூரமான தாக்குதலை நடத்துவதும் அதே அமெரிக்க ஏகாதிபத்தியம்தான்.

### அடுத்த இலக்கு – ஈராக், லிபியா, சூடான், சிரியா

ஆஃப்கானிஸ்தானுக்குப் பின்னர் அவர்களது குறி ஈராக்கின்பால் திரும்பியது. சதாம் ஹுசைன் தலைமையிலான ஈராக்கில் அடிப்படைவாதத் தாக்கமோ அல்லது மதப் பிரிவினைகளோ இல்லாமல் இருந்ததை இங்கே குறிப்பிடுவது அவசியமாகும். சதாம் ஹுசைன் பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கிறார் என்ற பொய்யான குற்றச்சாட்டின் பேரில் ஈராக் மீது போர்தொடுத்து ஆக்கிரமித்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அதுவரை அங்கு ஆட்சியில் இருந்த ஆளும் சுனி முஸ்லீம்களுக்கு எதிராக ஆளப்பட்டுவந்த ஷியா முஸ்லீம் சமூகத்தினரின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு பிளவை ஏற்படுத்தினர். இறுதியாக ஜனநாயகத்தை உருவாக்குகிறோம் என்ற பெயரில் ஷியாக்கள் ஆதிக்கத்துடன் அமைந்த தங்களது அடிவருடி பொம்மை அரசாங்கத்தை நிறுவினர். ஈராக்கில் வெற்றி பெற்ற பின்னர் ஒட்டுமொத்த அரபு நாடுகளின் மக்களையும் பிளவு படுத்துவதற்காக ஷியா–சுனி பிளவை ஊதிப் பெரிதாக்கினர், அதோடு பல்வேறு இஸ்லாமிய அடிப்படைவாதத்தையும் தூபம் போட்டு வளர்த்தனர்.

அதற்கு அடுத்த குறி லிபியா, அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக இருந்த மற்றொரு அரபு நாடு. ஈராக் அனுபவம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் நேட்டோ அணியினருக்கும் லிபியாவில் தங்களது யுக்திகளை மாற்றத் தூண்டியது. லிபியாவை தகர்த்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அதன் அதிபர் கடாபியையும் கொன்றனர். தங்களது தேசியமயமாக்கப்பட்ட எண்ணெய் வளத்தால் ஆப்பிரிக்காவிலேயே உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை எட்டியிருந்த லிபியா நவீன அரசின் ஒட்டுமொத்த கட்டுமானத்தையும் 7 மாதங்கள் தொடர்ந்து குண்டு வீசி அமெரிக்க–நேட்டோ கூட்டு ராணுவம் தகர்த்தது. நேட்டோ ஊடுருவதற்கு முந்தைய லிபியாவில் இருந்த மூன்றில் ஒருபங்கு லிபியா மக்கள், அதாவது 20லட்சம் லிபியர்கள், அண்டை நாடான துனிசியாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். அதன் பின்பு கொலைபாதகர்களின் பயிற்சிபெற்ற துப்பாக்கி தங்களுக்கு அடிபணிய மறுக்கும் சூடான் அதிபர் ஓமர் ஹசன் அல்–பஷீர் மீது திரும்பியது. அவர்மீது போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் போன்ற புனையப்பட்ட குற்றங்களைப் பொய்யாகச் சுமத்தினர், அந்த நாட்டின் பலதரப்பு மக்களிடையே பரஸ்பர நம்பிக்கையின்மையையும், வெறித்தனத்தையும் பிளவையும் தூண்டிவிட்டு ரத்த ஆறு ஓடவிட்டனர், அந்நாட்டை நிலைகுலையச் செய்தனர். இறுதியில் அந்நாட்டை இரண்டாகப் பிரிப்பதில் வெற்றியும் கண்டனர். இப்படியாக அந்த நாட்டின் வளமான எண்ணெய் வயல்களைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துவிட்டனர்.

அதற்குப் பின்னர்தான், ஆசாத்தின் சிரியா மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. அங்கே அமெரிக்க ஆதரவுடன் இயங்கும் 'சிரியா விடுதலை ராணுவம்' என்று அழைக்கப்படும் அல்கொய்தாவின் ஒரு பிரிவினரும் சுனி அடிப்படைவாதத்தோடு இணைந்து கொண்டு ஆசாத்தை பதவியிலிருந்து துரத்த கைகோர்த்தனர். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் வற்புறுத்தல் மற்றும் ஆதரவோடு சவுதி மற்றும் கத்தாரில் உள்ள அமெரிக்க ஆதரவு மதகுருக்களும் அடிப்படைவாத ஷேக்குகளும் 'மதநம்பிக்கைகளை மீறிச் சென்ற' ஆசாத் அரசாங்கத்தின் மீது விஷத்தைக் கக்க ஆரம்பித்தனர், சிரியாவை மற்றொரு ஆஃப்கானிஸ்தானாக மாற்றுமாறு இளம் சிரியர்களை வலியுறுத்தினர். ஆனால் இன்றுவரை அமெரிக்க ஏகாதிபத்தியம் தங்களது தீய நோக்கத்தை அடைய முடியவில்லை.

### ஐஎஸ்ஐஎஸ் – தோற்றம்

ஆனால், இதற்கிடையே ஒரே மதத்தவர்களிடையே பிளவினை ஏற்படுத்தும் அமெரிக்க கொள்கையில் மற்றொரு முக்கியமான திருப்புமுனை ஏற்பட்டது. ஷியாவாத பிரிவினைவாதம் பழைய சுனி எழுச்சி இயக்கத்தை தூண்டிவிட்டதோடு மட்டுமல்லாமல், அது ஒரு பயங்கரவாத கொலைவெறி சுனி தீவிரவாத அமைப்பான ஐஎஸ்ஐஎஸ், அல்கொய்தாவின் ஈராக் பிரிவாக, உருவாவதற்கு இட்டுச்சென்றது. ஆரம்பத்தில் அது ஈராக்கை மையப்படுத்தியே இருந்தது, அது ஈராக் இஸ்லாமிய அரசு (ஐஎஸ்ஐ) என்றே அழைக்கப்பட்டது, இவர்கள் அமெரிக்க ஆதரவோடு பல ஆண்டுகளுக்கு முன்பே உருவான உள்நாட்டுப் போரில் உருவான சிரியாவின் ஆசாத்–எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களோடு சேர்ந்து (இரண்டாவது எஸ்–ஐ சேர்த்து) ஐஎஸ்ஐஎஸ் என்று ஆனது. சவுதி அரேபியா, கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இன்னும் இதுபோன்ற வளைகுடா நாடுகளைச் சேர்ந்த அமெரிக்க ஆதரவு அரபு மன்னர்கள் ஐஎஸ்ஐஎஸ்ஸின் சித்தாந்த ஆத்மா கூட்டாளிகளாயினர். அவர்கள்தான் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பிற்கு தாராளமாக பண உதவியும் ஆயுதங்களும் வழங்கிவருதாக கூறப்படுகிறது. சவுதி அரேபியா, யுஏஇ, கத்தார் மற்றும் துருக்கி நாடுகள்தான் சிரியாவில் உள்ள இஸ்லாமிய புரட்சியாளர்களுக்கு நூற்றுக்கணக்கான லட்சக்கணக்கான டாலர்கள் வழங்கி ஊக்குவிப்பதாகவும் அது தான் ஐஎஸ்ஐஎஸ் ஆக உருவெடுத்துள்ளதாகவும் அமெரிக்க துணை அதிபர் ஜோ பிடேன் கூறியுள்ளார்.

ஐஎஸ்ஐஎஸ்க்கு அமெரிக்கா உதவி செய்வதற்கான ஆதாரங்களும் சாட்சிகளும் இருப்பதாக சமீபத்தில் ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது. ஐஎஸ்ஐஎஸ் அமைப்பிடம் உள்ள ஆயுதங்களையும் ராணுவத் தளவாடங்களையும் அமெரிக்க விமானங்கள் வழங்கிவருகின்றன என்பது கிடைக்கக்கூடிய தகவல்களிலிருந்து தெரியவருகிறது என்று கடந்த டிசம்பரில், ஈராக்கிய பாராளுமன்ற பாதுகாவல்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# யாகூப் மேமனின் தூக்கும் சம்பந்தப்பட்ட கேள்விகளும்

அப்பாவி மக்கள்257 பேரின் உயிர்களைப் பலி வாங்கிய 713 பேரைப் படுகாயப்படுத்திய 1993இல் நடைபெற்ற மும்பைகுண்டுவெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு உச்சநீதிமன்றத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட யாகூப் மேமன், அவரது அனைத்து கருணை மனுக்களும் நிராகரிக்கப்பட்ட பின்னர் கடந்த ஜூலை 30, 2015இல் தூக்கிலிடப் பட்டார். தீவிரவாதத் தாக்குலுக்கு துணைபோனதாக நிருபிக்கப் பட்டவருக்கு தூக்குதண்டனையை நிறைவேற்றிய செயலானது இந்த அரசாங்கம் தீவிரவாதத்தையும் தீவிரவாதிகளைக் கையாள்வதிலும் எந்த அளவு உறுதியாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது என்று பாஜகவினரும் அவர்களது அடிவருடிகளும் தம்பட்டம் அடித்து வருகின்றனர்.

காரணம் எதுவாக இருந்தாலும், மனசாட்சியற்ற கண்மூடித்தனமான தாக்குதல் தொடுத்து அப்பாவி மக்களை கொன்றுகுவிக்கும் பைத்தியக்காரச் செயலில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. குற்றவாளிகள் எந்த பகுதியை / நாட்டைச் சேர்ந்தவர், எந்த மொழி பேசுபவர் அல்லது எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்பது இங்கு ஒரு பொருட்டே அல்ல. குற்றம் குற்றமே; மனிதகுலத்திற்கு எதிரான தாக்குதலை மன்னிக்க முடியாது.

ஆனால் மேமன் தூக்கிலிடப்பட்ட சூழல்கள் சில முக்கியமான கேள்விகளை எழுப்பியுள்ளன, இது பல முக்கிய பிரமுகர்களின் கவனத்திலிருந்து தப்பிவிடவில்லை. ஜனநாயகக் கோட்பாடுகள், நெறிமுறைகள், நியதிகள் மீதும் நீதி பரிபாலனத்தின் மீதும் நம்பிக்கை கொண்ட சரியாகச் சிந்திக்கும் மனசாட்சியுடைய எவரும் சட்ட விதிமுறைகளைச் சரியாகப் பின்பற்றித்தான் நீதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை உறுதி செய்துகொள்ள விரும்புவர். எனவே, மேமன் தூக்கிலிடப்பட்டது தொடர்பான உண்மைகளையும் கருத்துக்களையும் அவர்கள் முன்பு வைக்கப்படவேண்டியது அவசியம். அதனடிப்படையில் அரசாங்கமும் அதன் அடிவருடிகளும் கோருவது நியாயமா இல்லையா என்பதை அவர்கள் தீர்மானிக்க வேண்டும்.

### மேமன் கைது செய்யப்படவில்லை, சரணடைந்தவர்

யாகூப் மேமன் எந்தவொரு விசாரணையின் போதோ, புலனாய்வின் போதோ, சோதனையின் போதோ கைதுசெய்யப்படவில்லை. இந்திய ரகசிய உளவு அமைப்பான ரா–வின் (RAW-Research Analysis Wings) மூத்த அதிகாரியும், ரா–வின் பாகிஸ்தான் பிரிவின் முன்னாள் தலைவருமான திரு பி ராமன் கூறியிருப்பதாவது : 'பாகிஸ்தானின் உளவுப் பிரிவின் (இன்டர் சர்விசஸ் இன்டலிஜன்ஸ் – ISI) நடவடிக்கைகளில் மேமனுக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் திருப்தி இல்லாததால் அவர்களது ஆலோசனையின்படி இந்தியாவிற்கு சென்று மும்பை போலீசிடம் சரணடைந்து விடலாம் என்று முடிவெடுத்து ஒரு உறவினரிடமும் வழக்கறிஞரிடமும் கலந்தாலோசிப்பதற்காக ரகசியமாகக் காட்மாண்டு வந்தார். ஆனால் அவர்களுக்கு நீதி கிடைக்காது என்று கருதி அந்த உறவினரும் வழக்கறிஞரும் சரணடையவேண்டாம் என்று அறிவுறுத்தினர். கராச்சிக்கே திரும்பிச் சென்றுவிடுமாறும் அறிவுறுத்தினர். கராச்சி செல்வதற்கான விமானத்தை பிடிப்பதற்கு முன்பாக, அவரை நேபாள் காவல்துறையினர் சந்தேகத்தின் அடிப் படையில் கைது செய்து, அவரை அடையாளம் கண்டு பிடித்து துரிதமாக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தனர்.'

திரு ராமன் அவர்கள் கூறியதைப் போன்றே புலனாய்வு பத்திரிகையாளர்களும் உறுதிப்படுத்தினர். 'இச்சதியில் யாகூபும் அவரது குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களும் ஈடுபட்டனர் என்பதிலும் 1994 வரை ஐஎஸ்ஐக்கு ஒத்துழைப்பு வழங்கினர் என்பதிலும் துளியும் சந்தேகம் இல்லை.' என்றும் திரு ராமன் கூறியுள்ளார். அதோடு 1) 'குற்றத்தில் அவருடைய ஈடுபாடு 2) இந்தியாவிடம் அவர் தாமாக முன்வந்து சரணடைந்தது என்ற இரண்டு முக்கியமான அம்சங்களை வைத்து யாகூப்பை விடுவிப்போம் என்றோ அல்லது அதை காரணமாக வைத்து அவருக்கு அனுதாபம் காட்டுவதோ கூடாது' என்றும் கூறுகிறார்.

ஆனால் சதியை வெளிக்கொண்டு வருவதில் புலனாய்வு அமைப்புகளுக்கு யாகூப் பேருதவியாக இருந்ததால் அவருக்கும் மரணதண்டனை வழங்குவதைப் பற்றியும் ராமன் கூறியிருப்பதாவது: 'காத்மாண்டுவில் கைது செய்யப்பட்டது முதல் புலனாய்வு அமைப்புகளுக்கு யாகூப் ஒத்துழைப்பு நல்கியது, பாகிஸ்தானிலிருந்து வந்து சரணடையும் படி தனது குடும்ப உறுப்பினர்களை அவர் சம்மதிக்க வைத்தது போன்றவை, எனது பார்வையில், அவருக்கு மரணதண்டனையை நிறைவேற்ற வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைத் தீர்மானிப்பதில் முக்கியமானவையாகக் கருதப்பட வேண்டிய சூழ்நிலைகளாகும்'. இது மிகவும் முக்கியமான கருத்தாகும். ஒருவர் கிட்டத்தட்ட அப்ரூவர் ஆகிவிட்டபின்னர், குற்றம் எப்படி நிகழ்த்தப்பட்டது என்பது குறித்த முக்கியமான விஷயங்களை அளித்தவருக்கு மரணதண்டனை வழங்கலாமா? இது பூர்ஷ்வா நீதி பரிபாலனத்தின் இலக்கு மற்றும் பிரதான கோட்பாடுகளுக்கு ஒத்து வருகிறதா?

### மேமன் வழக்கில் நீதித்துறை செயல்முறைகள் மீது எழுப்பப்படும் கேள்விகள்

யாகூபின் மரணதண்டனையை நியாயப் படுத்துவது தொடர்பாக ஒரு முறையான கருத்தை உருவாக்க முயற்சி செய்துபார்த்தால் அங்கே முறை தவறல்களும், தொடர்புகள் இல்லாமல், இணைப்புகள் அற்ற குற்றச்சாட்டுப் பதிவுகளும் குற்றச் சாட்டிற்குப் போதிய ஆதாரங்கள் இல்லாமல் இருப்பதுமே மேலே தெரிகிறது. யாகூப் மேமனுக்கு மரணதண்டனை விதித்த தடா நீதிமன்றம் தீர்ப்பளித்த ஏப்ரல் 30 அன்று அவரது வாதம் கேட்கப் படாதது மட்டுமல்ல, நீதிமன்றம் யாகூப் மேமனிடம் மரண தண்டனை குறித்து தெரிவிக்கவில்லை. மரணதண்டனையை நிறைவேற்றுவதற்கு 90 நாட்கள் அவகாசம் அளித்து, தண்டனை நாளை ஜூலை 30 ஆக நிர்ணயித்தது. அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட செய்தியே ஜூலை 13 ஆம் தேதி, அதாவது தண்டனை நிறைவேற்றுவதற்கு 17 நாட்களுக்கு முன்புதான் தெரிவிக்கப் பட்டது.

ஜூலை 28 அன்று அவர் குடியரசுத் தலைவரிடம் கருணை மனுத் தாக்கல் செய்தார். அதில் தான் பாகிஸ்தானிடமிருந்து திரும்பி வந்தது தொடர்பாக ஒரு முக்கியமான சூழ்நிலைமை விசாரணை நீதிமன்றத்திடமும் உச்சநீதிமன்றத்திலும் திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது என்பதை குடியரசுத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறார். நாம் மேலே குறிப்பிட்ட திரு பி ராமன் அவர்களின் கட்டுரையை அதற்கு ஆதாரமாகத் தருகிறார். ரா, தகவல் தொடர்பு மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், மற்றும் சிபிஐ உள்ளிட்ட சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து அனைத்து ஆவணங்களையும் கோரிப் பெறவேண்டுமென்றும் தனது வழக்கை புதிதாக நடத்தவேண்டும் என்றும் குடியரசுத்தலைவருக்கு மேமன் வேண்டுகோள் விடுத்தார். இந்த புதிய ஆவணங்களில் உள்ள உண்மைகள் நீதிமன்றங்களில் உள்ள ஆவணங்களிலுள்ள தகவல்களிலிருந்து வேறுபட்டுள்ளன, எனவே இவற்றை உச்ச நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்றங்கள் பார்ப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது என்று மேமன் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய சூழல்கள் உருவானால் அல்லது ஏதேனும் புதிய ஆவணங்கள் கிடைக்கப்பெற்றால், தண்டனைக் கைதியோ அல்லது அவரது சார்பாக ஒருவரோ முந்தைய உத்தரவை மறு ஆய்வு செய்யக்கோரி குடியரசுத் தலைவருக்கு புதிய கோரிக்கை மனு அளிக்கலாம் என்று 'மரண தண்டனைக்கு உள்ளானவர்களின் கருணை மனுக்கள் தொடர்பான செயல்நடைமுறைகளின்' 8வது விதி தெளிவாகக் கூறுகிறது. ஆனால் இது எடுத்துக்கொள்ளப் படவில்லை. தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதால் தான் மிகுந்த மனநோய்க்கு ஆளாகியிருப்பதையும் குடியரசுத் தலைவரின் கவனத்திற்கு மேமன் கொண்டுவந்தார். இந்த இரண்டு காரணங்களுக்காக ஒருவரது மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றலாம் என்று உச்சநீதிமன்றம் கூறிய தீர்ப்பினையும் எடுத்துக்காட்டினார்.

ஆனால் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு விரைந்தார். ரகசியமாக விவாதங்கள் நடைபெற்றன. இறுதியில் கருணை மனுவைக் குடியரசுத் தலைவர் நிராகரித்தார். குடியரசுத் தலைவர் தனது கருணை மனுவை நிராகரித்துவிட்டால் மரணதண்டனை விதிக்கப் பட்ட ஒருவர், தனக்கு மரண தண்டனையிலிருந்து இரக்கம் காட்டும்படி கோரி உயர்நீதிமன்றத்திலோ அல்லது உச்சநீதிமன்றத்திலோ ரிட் மனு தாக்கல் செய்யலாம். அந்த இறுதி வாய்ப்பையும் பயன்படுத்தி ஜூலை 29 ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் தனது மரணதண்டனையை ரத்து செய்யக்கோரி மேமன் ரிட் மனு தாக்கல் செய்தார். மரணதண்டனை நிறைவேற்ற உள்ளதாகத் தனக்கு தெரிவிக்கப்பட்ட 17 நாட்களிலேயே தண்டனையை நிறைவேற்ற முயற்சிக்கின்றனர். இதன் மூலம், தண்டனை விவரம் குற்றவாளிக்கு தெரிவிக்கப்பட்ட நாளுக்கும் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்குமிடையே 90 நாட்கள் இடைவெளி இருக்க வேண்டும் என்று தண்டனை வழங்கிய தடா நீதிமன்ற நீதிபதி வழங்கிய கால அவகாசத்தை அரசு தன்னிச்சையாக மீறுகின்றது என்று மேமன் குற்றம் சாட்டினார்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவரது கருணை மனு நிராகரிக்கப்பட்ட செய்தி அவரிடம் தெரிவிக்கப்பட்டதிலிருந்து 14 நாட்களுக்கு முன்பாக மரண தண்டனையை நிறைவேற்றக்கூடாது என்று உச்ச நீதிமன்ற உத்தரவுகள் இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். ஆனால் இவை எல்லாவற்றையும் உச்சநீதிமன்றம் நிராகரித்துவிட்டது அல்லது மீறிவிட்டது அல்லது கவனிக்கத் தவறிவிட்டது.

### நள்ளிரவில் கடைசி நேரத்தில் விசாரிக்கப்பட்ட கருணை மனு

நீதி மறுசீராய்வு பரிகாரம் என்பது, மரண தண்டனை விதிக்கப்பட்டவருக்கு இருக்கக்கூடிய போதிய அனைத்து வாய்ப்புகளையும் வழங்குவது முறை என்பதை அனைவரும் அறிவர். பல நேரங்களில் மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு இடைக்காலத் தடைகளைக்கூட நீதிமன்றங்கள் வழங்கியுள்ளன. ஆனால், யாகூப் மேமன் வழக்கில் குறிப்பிட்ட நாளில் குறித்த நேரத்தில், அனைத்து முந்தைய உதாரணங்களையெல்லாம் மீறியாவது, அவரது உரிமைகளையெல்லாம் பறித்தாவது, தூக்கு தண்டனையை நிறைவேற்றியே ஆகவேண்டும் என்ற உணர்வோடு நீதிமன்றமும் அரசாங்கமும் இணைந்து செயல்பட்டதை அனைவரும் கவனித்தனர். யாகூப் மேமனைத் தூக்கிலிடுவதற்கு கீழமை நீதிமன்றம் விதித்த காலக்கெடு உத்தரவு மாற்றமுடியாத புனிதமானது என்பதுபோன்று பார்த்தனர்.

ஜூலை 28இல் யாகூப் மேமனின் கருணை ரிட் மனுவை முதலில் விசாரித்த நீதிபதிகள் குரியன் ஜோசப் மற்றும் அனில் ஆர் தாவே ஆகியோரிடையே வேறுபட்டு கருத்துக்கள் வெளிப்பட்டன. விசாரணை நடைமுறையில் பெரிய பலகீனம் இருப்பதாகவும் ஆதலால் ஜூலை 21இன் அமர்வால் தள்ளுபடி செய்யப்பட்ட மேமனின் மறு ஆய்வு மனுவை மீண்டும் புதிதாக விசாரிக்க வேண்டும் என்றும் நீதிபதி குரியன் ஜோசப் கூறினார். ஒரு நபரின் வாழ்வை மறுக்கும்போது சட்டத்தால் ஏற்கனவே உருவாக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படாதபோது நீதி வழங்கும் முறையில் எந்த தொழில்நுட்ப நடைமுறைகளும் நிற்க முடியாது என்று நிதிபதி ஜோசப் கூறினார். சட்டம் என்பது மனிதனுக்காகத்தான், சட்டம் ஒருபோதும் நிராதரவானதாக இருக்கமுடியாது. அதோடு நீதிமன்றம், அதுவும் அரசியலமைப்புச் சட்டத்தின் சகல உச்ச அதிகாரமும் படைத்த உச்சநீதிமன்றம் அதிகாரமற்றதாக இருக்கக் கூடாது என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

இதனால் அவர் ரிட் மனுவை விசாரிக்கும் அமர்விலிருந்து நீக்கப்பட்டார். ஜூலை 29இல் மேமனின் ரிட் மனுவை விசாரிக்க நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, பிரஃபுல்லா சி. பண்ட், மற்றும் அமிதாவா ராய் ஆகியோர் அடங்கிய மூவர் அமர்வை தலைமை நீதிபதி ஹெச் எல் தத்து நியமித்தார். ஜூலை 30 அன்று கூடிய இந்த அமர்வு இறுதியில் நீதிபதி குரியன் ஜோசப் அவர்களின் கருத்தை நிராகரித்தது.

அடுத்த விசித்திரம் என்னவென்றால், இது போன்ற மனுக்கள் நீதிபதிகளின் இல்லங்களில் தான் விசாரிக்கப்படும். ஆனால் இந்த வழக்கில் தனது மரணதண்டனை நிறைவேற்றத்தை நிறுத்தி வைக்கக்கோரும் ஒரு மரண தண்டனைக் கைதியின் மனுவை மூன்று நீதிபதிகள் அமர்வு விசாரிப்பதற்காக ஜூலை 29 அன்று நள்ளிரவில் உச்சநீதிமன்றத்தின் கதவு திறக்கப்பட்டது. அவருக்கு மரண

தொடர்ச்சி 4ம் பக்கம்

# யாகூப் மேமனின் தூக்கும் சம்பந்தப்பட்ட கேள்விகளும் . . .

3ம் பக்கத் தொடர்ச்சி

தண்டனை நிறைவேற்றுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக அது விசாரிக்கப்பட்டது. இவ்வளவு அசுர வேகம் எதற்கு என்பதற்கான விளக்கம் இல்லை. நீதிபதிகளின் இல்லத்தில் விசாரித்தால் எதிர்தரப்பு வரவில்லை என்பதால் முதலில் மரணதண்டனை நிறைவேற்றுவதற்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும். எனவே அதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகவே அட்டர்னி–ஜெனரலும் இருப்பார் என்பதால் வேகமான முடிவெடுத்துவிடலாம் என்ற நோக்கத்தோடு திட்டமிட்டே நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றிருப்பதுபோல் தெரிகிறது.

யாகூப் மேமனின் தூக்கு தண்டனையை நிறுத்தி வைப்பதற்கும் அவரது மனுவின் சாதகமான அம்சங்களை விசாரிப்பதையும் தவிர்ப்பதற்கு நீதிமன்றம் ஏன் இவ்வளவு முனைப்பு காட்டியது என்ற கேள்வி தொடர்ந்து பதிலில்லாமல் நீடித்து வருகிறது.

### இந்திய தண்டனைச் சட்டம் 120 ஆ பிரிவு திட்டமிட்ட பிற்சேர்க்கையே

தடா சட்டத்தின் பிரிவு 3(3) படிதான் விசாரணை நீதிமன்றம் மேமனைக் குற்றவாளி என்று அறிவித்தது. தீவிரவாத செயலில் ஈடுபட்டவர்களுக்கு இப்பிரிவின்படி அதிகபட்ச தண்டனையாக அபராதத்துடன் ஆயுள்தண்டனைதான் வழங்க முடியும் என்பதை இங்கே கவனிக்க வேண்டும். ஆனால் யாகூப் மேமனுக்கு மரண தண்டனை வழங்க வேண்டுமென்பதற்காகத்தான், குற்றமிழைத்தற்கான சதிக்குத் துணை நிற்கும் எவர் ஒருவருக்கும் மரண தண்டனை வழங்க வேண்டும் என்று கூறும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின்(ஐபிசி) 120 ஆ பிரிவு தடா சட்டத்தின் பிரிவு 3 (3) உடன் பின்னால்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது போல் தெரிகிறது.

இந்த எல்லா உண்மைகளையும் கோர்வையாக, எந்தவொரு முன்னபிப்பிராயமும் இன்றி யார்பக்கமும் சாயாமல் பாகுபாடின்றி பார்ப்பார்களேயானால் ஒருவேளை நீதி பிறழ்வு நடைபெற்றிருப்பதை மறுக்க முடியாது. யாகூப் மேமன் வழக்கில் 'மிகப்பெரிய நீதி கேலிக்கூத்தாக்கல் நடைபெற்றிருக்கிறது' என்று உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூ அவர்களும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

2001இல் நடைபெற்ற பாராளுமன்றத் தாக்குதல் வழக்கில் தொடர்புடைய அப்சல் குரு தூக்கிலிடப்பட்டபோதுகூட முறையான நீதி பரிபாலன நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டனவா அல்லது 'வேறு விஷயங்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டதா' என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன. அப்சல் குருவும்கூட சரணடைந்த ஒருவரே. அப்சலுக்கு எதிராக எந்த ஒரு நேரடி சாட்சியமும் இல்லை. அரசு தரப்பில் ஆஜர்படுத்தப்பட்ட 80 சாட்சிகளில் ஒருவர்கூட அப்சலுக்கு ஏதேனும் தீவிரவாத அமைப்போடு தொடர்பு உண்டு என்றோ அல்லது உறுப்பினராக இருந்தாரென்றோ குற்றம் சுமத்தவில்லை. ஆனாலும் கூட பலரைப் பலிகொண்ட, நாட்டையே உலுக்கிய சம்பவமாக இருப்பதால் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அதிகபட்ச தண்டனை வழங்கினால்தான் சமுதாயத்தின் ஒட்டுமொத்த கூட்டு மனசாட்சியும் சாந்தமடையும் என்று நீதிமன்றம் கருதியதால், சந்தர்ப்ப சூழ்நிலைமைகளை மட்டுமே கருத்தில்கொண்டு அப்சலுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

இந்த வழக்கிலும்கூட ஒரு சாமானிய மனிதன் தனது புத்தி சாதுர்யத்தைப் பயன்படுத்தி அனைத்து 'சந்தர்ப்ப சூழ்நிலைமைகள்' அறிக்கைகள் மற்றும் சம்பவங்களைப் பார்த்தால் இதிலும்கூட வேறு ஏதோ சம்பந்தமில்லாத காரணங்களுக்காகத்தான் மரண தண்டனை வழங்கப்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் எழக்கூடும்.

### இது அரசியல் முடிவாக இருக்குமோ?

யாகூப் மேமனின் வழக்கு ஏன் இவ்வாறு கையாளப்பட்டது என்ற கேள்வி இயற்கையாகவே எழுகிறது. இதற்கு விடை காணவேண்டுமென்றால், நாம் சற்று வரலாற்றை துருவிப்பார்க்க வேண்டும். முழுக்க முழுக்க தேர்தல் ஆதாயத்திற்காக 1984இல் பாபர் மசூதியின் பூட்டை முன்னாள் காங்கிரஸ் பிரதமர் ராஜீவ் காந்தி திறந்துவிட்டபோது நாட்டில் மதப் பதட்டம் புதிய உச்சத்தில் தூண்டப்பட்டது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். உடனடியாக இதை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட இந்துத்துவா மதவெறி ஆர்எஸ்எஸ்–பாஜகவினர் தங்களது தீய இந்துத்துவா விஷப் பிரச்சாரத்தைப் பரப்புவதற்கும் சிறுபான்மை முஸ்லீம்கள் மீது வெறுப்புப் பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கும் பயன்படுத்திக் கொண்டனர். எப்படியாவது மத ரீதியில் மக்களை ஒன்றுதிரட்டி ஆட்சிக்கு வரவேண்டும் என்று திரிந்த ஆர்எஸ்எஸ்–பாஜகவினர் முஸ்லீம்–எதிர்ப்பு வெறியைத் தூண்டுவதில் வெற்றி கண்டனர். வரலாற்றுச் சிறப்புமிக்க பாபர் மசூதியை இடித்தனர். நாட்டில் மத ரீதியான மோதல்களைத் தூண்டி ரத்த ஆறு ஓடவிட்டனர்.

மதரீதியான பிளவையும் பகையையும் மிகைப் படுத்தி ஊதிப் பெரிதாக்கிக் காட்டவேண்டும் என்ற நயவஞ்சக நோக்கத்தின் ஒரு பகுதியாகத் தான் ஆர்எஸ்எஸ்–பாஜக–சிவசேனா கூட்டணியால் மும்பைக் கலவரம் திட்டமிட்டு பெரிதாக்கப்பட்டது. 90களின் மத்தியில் வெளியிடப்பட்ட நீதியரசர் பி என் ஸ்ரீகிருஷ்ணா அறிக்கையில், மும்பைக் கலவரங்களுக்கு சிவசேனா தலைவர்களே பொறுப்பு என்றும் அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்ய வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பரிந்துரைகளை அன்றைய பாஜக–சிவசேனா கூட்டணி அரசாங்கம் ஏற்கவில்லை. இதற்கான காரணம் யாவரும் அறிந்ததே.

கூட்டாகக் கலவரங்கள் செய்து கொலைகளையும் கொள்ளைகளையும் நடத்தும் வழக்குகளைக் கையாள்வதில் இந்திய முதலாளித்துவ அரசும் குற்றவியல் நீதித்துறையும் மிகவும் அப்பட்டமாக பாரபட்சமாக செயல்படுகின்றன என்று பலரும் சரியாகக் கருதுகின்றனர். இந்தக் கருத்துக்கு ஆதாரமாக, யாகூப் மேமனுக்கு மரண தண்டனை வழங்கினால் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு தடையாக அமையலாம் என்றும் பலியான 257 பேர் குடும்பங்களுக்கு ஆறுதலாக இருக்கும் என்று கூறும் அதே வேளையில் 900 பேரைப் பலிகொண்ட மும்பைக் கலவரத்தை நடத்தியவர்களில் வெறும் 3 பேருக்கு மட்டுமே ஒரு ஆண்டு சிறைத் தண்டனை மட்டுமே வழங்கப்பட்டுள்ளதோடு, அக்கொடிய குற்றத்தில் ஈடுபட்ட பெரும்பாலானோர் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டது ஏன் என்ற கேள்வியை எழுப்புகின்றனர்.

அப்படியானால் மதத்தின் பெயரால் கத்தியையும் துப்பாக்கியையும் கையில் ஏந்திக்கொண்டு அப்பாவிமக்களைக் கொன்று குவிக்கும் கலவரக்காரர்களை ஆர்டிஎக்ஸ் குண்டு வைத்து தாக்குதல் நடத்தும் தீவிரவாதிகளோடு ஒப்பிடக்கூடாது என்று நம்பவேண்டுமா? மும்பையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எவ்வித சகிப்பையும் காட்டவில்லை என்கின்றனர். அப்படியானால் மாலேகான், ஆஜ்மீர் அல்லது ஷம்ஜெளதா எக்ஸ்பிரஸ் ரயில் குண்டு வெடிப்புகளில் ஈடுபட்ட இந்து பயங்கரவாத அமைப்புகளின் மீது ஏன் எந்தக் கோபக்கனலும் காட்டப்படவில்லை?

மும்பைத் தாக்குதலில் அரசு வழக்கறிஞராக செயல்படுவருக்கு ராஜ மரியாதை வரவேற்பு அளிக்கப்படுகிறது. ஆனால் அதே வேளையில் ஆஜ்மீர் மற்றும் மாலேகான் குண்டு வெடிப்பு வழக்குகளில் அரசு வழக்கறிஞர்களாக உள்ளவர்கள் மிரட்டப்படுகின்றனர்.

உத்திரபிரதேசம் மாநிலம் மீரட்டில் ஹசிம்புரா பகுதியில், சிறுபான்மை மதத்தைச் சேர்ந்த 42 பேரை ஆயுதம் தாங்கிய காவல் துறையினரின் 19 பேர் அடங்கிய குழு சுற்றிவளைத்து, வேனில் ஏற்றிச் சென்று துப்பாக்கியால் சுட்டுக்கொன்று நீரில் வீசினர் என்ற குற்றச்சாட்டு எழுந்தபோதிலும், குற்றமிழைத்தவர் ஒருவரைக்கூட கண்டறியமுடியாதது எப்படி?

கோத்ரா ரயில் எரிப்பு வழக்கில் குற்றவாளிகளுக்கு ஆயுள்தண்டனையோ அல்லது மரண தண்டனையோ வழங்கப்படுகையில், முஸ்லீம் எதிர்ப்பு குஜராத் கலவரத்தில் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டவர்கள் எவ்வித தண்டனையும் இல்லாமல் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டது எப்படி? பிப்ரவரி 2002 இல் அகமதாபாத் நகரில் நரோடா பாட்டியா படுகொலைகள் போன்ற 97 பேரை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்த பஜ்ரங்தள் அமைப்பைச் சேர்ந்த மூர்க்கத்தனமான இந்துமத வெறியர்கள் 5000 பேரை எவ்வித தண்டனையும் இன்றி பாஜக அரசாங்கம் நடமாட விட்டிருப்பது எப்படி?

மும்பை குண்டு வெடிப்பில் பலியானோர் குடும்பங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பது சரிதான், அப்படியானால் மும்பைக் கலவரத்தில், குஜராத் படுகொலை சம்பவங்களில், சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தில் பலியானோர் குடும்பங்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டாமா?

பயங்கரவாத சதியைக் காட்டிலும் கலவர வழக்குகளில் சாட்சியங்களைத் திரட்டுவது மிகவும் கடினம் என்ற வாதத்தை ஏற்கமுடியுமா? இது குற்றமிழைத்தவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஏதுவான விசாரணைகளாகவும், குற்றவாளிகள் மீது பச்சோதாபம் காட்டுவதாகவும் ஆகாதா? அரசு எந்திரம் ஒருதலைச் சார்பாகவும் மதச் சார்பாகவும் செயல்படுவதற்கு இவை சான்றாக இல்லையா?

ஒரு கலவரக்காரர், கொலைகாரர், மதவெறிபிடித்தவர், மத சகிப்பின்மை மனம் கொண்டவர், பழமைவாதத்தைப் போதிப்பவர் – அவரது இனம், மொழி, மதம், பிராந்தியம் என்னவாக இருந்தாலும் – யாராக இருந்தாலும் அவர்களை மனித குலத்திற்கு எதிராக மிகக் கொடிய தாங்கொணா குற்றத்தை செய்தவர் என்றே வகைப்படுத்த முடியும்.

ஹைதராபாத்தை சேர்ந்த அசாதுதீன் ஒவாய்சி, எம்ஐஎம், எம்பி தேர்தல் ஆதாயம் பெறுவதற்காக மத ரீதியாக குட்டையைக் குழப்பி விட்டு 'முஸ்லீம் நலன்களைப் பாதுகாப்பவர்' என்று தன்னைத் தானே அறிவித்துக்கொண்டு கடுமையான கண்டனத்திற்கு ஆளானார், மும்பைக் கலவரத்தில் தன்னை இந்துக்களின் பாதுகாவலன் என்று பறைசாற்றிக்கொண்டு, அதே உணர்வைப் பயன்படுத்தி 1995 மகாராஷ்டிர மாநில தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்த சிவசேனா கட்சியின் தலைவர் பால் தாக்கரேவுக்கு 'தேசபக்தர்' என்ற பட்டம் வழங்கப்படுவது எப்படி?

அரசாங்கமும் – நிர்வாகமும் மத சார்புடையதாக இருப்பதாலோ என்னவோ, ஒரு 'வெளிப்படையான மத அடையாளத்துடன்' ஒரு 'தீவிரவாதி' அல்லது 'குற்றவாளி' சிக்கிவிட்டால், அதிகாரத்தில் இருப்பவர்களின் 'தேசியவாதம்' அல்லது 'தேசபக்தி' யை நிரூபிப்பதற்காக உடனே ஒரு மதமே குறிவைக்கப்படுகிறது. அதேவேளையில் குற்றவாளி 'வலதுசாரி இந்து பிரிவைச்' சேர்ந்தவராக இருந்தால் அனைத்து குற்றங்களும் ஒன்றுமில்லாததாகிவிடுகிறது. உதாரணத்திற்கு, சுவாமி ஆசீமானந், காவி உடைதரித்த துறவி, 2007இல் 68 அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட பாகிஸ்தானுக்கு சென்றுகொண்டிருந்த ஷம்ஜெளதா எக்ஸ்பிரஸ் ரயிலில் கொலைவெறித் தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்டவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர் கடந்த ஆண்டு பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தால் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இந்த ஜாமீனை எதிர்த்து மனு செய்வதில் அரசாங்கத்திற்கு விருப்பம் இல்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. 'உச்சநீதிமன்றத்தில் இந்த உத்தரவை எதிர்த்து மனுதாக்கல் செய்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை' என்று தீவிரவாத வழக்குகளைக் கையாளும் தேசிய புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளதாக பாராளுமன்றத்தில் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதேபோல் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற மாலேகான் குண்டுவெடிப்பு வழக்குகளில் அரசு வழக்கறிஞராக உள்ள திருமதி ரோகிணி சாலியன், என்.டி.ஏ. ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த வழக்கில் மென்மையாக நடந்துகொள்ளும்படி தான் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறி அதிர்வலைகளை ஏற்படுத்தினார். வடக்கு மஹாராஷ்டிராவில் உள்ள மாலேகான் எனுமிடத்தில் முஸ்லீம்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதியில் நடைபெற்ற இந்த குண்டுவெடிப்பை விசாரித்து வரும் தேசிய புலனாய்வு அமைப்பு இந்த குண்டு வெடிப்பை இந்து பயங்கரவாதிகள்தான் வெடிக்கச் செய்தனர் என்று குற்றம் சாட்டியுள்ளது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர் தான் ஜாமீனில் வெளிவர ஏதுவாக, தங்கள் மீது மஹாராஷ்டிரா திட்டமிட்டு குற்றம் புரியும் சட்டத்தின் (எம்சிஓசிஏ) கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளதைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். இதன்மூலம் இந்த வழக்கை உச்சநீதிமன்றத்தில் ஒன்றுமில்லாமல் செய்ய முயற்சிகள் நடைபெறுகின்றன என்றும் ரோகிணி சாலியன் குற்றம் சாட்டியுள்ளார்.

தொடர்ச்சி 6ம் பக்கம்

# இணையதளத்தில் இலவசமாக தகவல் பெறும் உரிமையை தக்கவைப்பதன் தேவை

சமீபகாலமாக 'நெட் நியூட்ராலிடி' (இணையதள சமநிலை) என்ற தலைப்பு செய்தித் தாள் தலையங்கங்களில் அடிக்கடி அடிபட்டதை நாம் பார்த்தோம். இந்த இணையதள சமநிலை மீறப்படுவதை இணையதள பயனாளிகள் கடுமையாக எதிர்த்துவருகின்றனர். அறிவுத்துறையில் வளர்ச்சிக்கு உதவக்கூடியதாகவும் பல்வேறு மனித நடவடிக்கைகளுக்கும் உதவக்கூடியதாகவும் நிலவும் 'தகவல் சேகரிப்பு மற்றும் பரப்புதலுக்கு' மாபெரும் மாற்றத்தை கொடுத்திருக்கும் இந்த அறிவியல் கண்டுபிடிப்பின் பயன்களை இந்த சமநிலை மீறல் மக்களுக்குக் கிடைக்காமல் செய்துவிடும் என சிலர் அச்சம் தெரிவிக்கின்றனர். இணையதளம் உருவாக்கப்பட்டபோது அதை கருத்தாக்கம் செய்தவர்கள், தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தவர்கள், கருத்துக்களையும் தகவல்களையும் மனிதயினம் அதனை பகிர்ந்துகொள்ளும் சுதந்திரமான ஊடகமாகக் கண்ணுற்றனர். இதுவரையில் இணையதளம் அவ்வாறுதான் செயல்பட்டுக் கொண்டிருந்தது. இதனால்தான் யார்வேண்டுமானாலும் வெப்சைட் உருவாக்கிக் கொள்ள முடியும், மற்றவர்கள் அறிய வேண்டும் என நினைக்கும் அனைத்து விவரங்களையும் ஒருவர் அதில் தரமுடியும், உலகத்தில் யார்வேண்டுமானாலும் அத்தகவல்களை முழுமையாக அணுகிப் பெறமுடியும். இணையதளம் வருவதற்குமுன் இந்த வசதியை நினைத்துப்பார்க்கவே முடியாது. ஒருவர் தனது கருத்துக்களை பிறர் அறியச் செய்யவேண்டுமானால் முன்பெல்லாம் பிரசுரிப்பவர்களையும் மார்கெட்டிங் நெட்வொர்க்கையும் நம்பியிருக்கவேண்டியிருந்தது.

### மனிதயினத்திற்கு இணையதளம் ஒரு வரப்பிரசாதம்

இணையதளம் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக மனிதயினம் செழுமையான பயன்பாட்டைப் பெற்றிருக்கிறது. யார்வேண்டுமானாலும் இமெயில் மூலமாக செய்திகளை பரிமாறிக் கொள்ளலாம். கூகில் தேடு யந்திரம் மூலமாக எந்தத் தகவலையும் தேடிப் பெறலாம். இசை, காட்சிப் படங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றை இலவசமாகவோ குறைந்த செலவிலோ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இலவச தகவல் பரிமாற்றத்தால் என்ன சாதிக்க முடியும் என்பதற்கு விக்கிபீடியாவை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். ஒருவர் தான் அறிந்த எதை வேண்டுமானாலும் பதிவு செய்ய திறந்தவெளி இணைய மேடையாக இதனை உருவாக்கினர். இவர்கள், மனிதயினத்தின் ஒட்டுமொத்த அறிவையும் நல்லெண்ணத்தையும் நம்பினர். விளைவு, உலகம் முழுதும் மக்கள் இந்த அறிவுக் களஞ்சியத்திற்கு இலவசமாகத் தங்களுக்குக் கிடைக்கும் தகவல்களை தொடர்ந்து சேகரித்தார்கள். அது இப்போது ஒரு மாபெரும் அறிவுக் களஞ்சியமாக, எந்த ஒரு தனி நிறுவனத்தாலும் உருவாக்க இயலாத ஒன்றாக விளங்குகின்றது. அறிவியலும் இதன்மூலம் பெரும் பயனை அடைந்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட ஆராய்ச்சிக்காக ஒருவர் நூலகத்தில் பல மணிக்கணக்காக தேடவேண்டிய விவரத்தை, அதேபோன்று, மாதக்கணக்கில் காத்திருந்து பெறக்கூடிய ஆராய்ச்சிக்கட்டுரையை இன்று ஒரு நிமிடத்தில், தட்டச்சின் ஒரு சொடுக்கில் இணையதளம் மூலம் சாதித்துவிடலாம்.

அறிவியல் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதை இணையதளம் படுவேகமாக முடுக்கிவிட்டுள்ளது. அரசாங்கங்களின் நியாயமற்ற கொள்கைக்கெதிராக வெகுஜன போராட்டங்களை நடத்தவும் இணையதளம் உலக அளவில் கிரியா ஊக்கியாக செயல்படுகின்றது. வெகுஜன இயக்கங்களுக்கு சமூக வலைதள (Website) மேடையாக 'வால் ஸ்டிரீட்டை ஆக்கிரமிப்போம்' இயக்கம், 'அரேபிய எழுச்சி' இயக்கம், இந்தியாவில் ஊழலுக்கு எதிரான இயக்கம் போன்றவை செயல்பட்டதை நாம் அறிவோம். அவற்றில் என்ன பலகீனங்கள் இருந்தபோதிலும் அவை மிக முக்கியமான பங்காற்ற இணையதளம் ஊடகம் பயன்பட்டது.

### இணையதளம் இதுவரை ஒரு திறந்தவெளி மேடையாக இருந்து வருகிறது

இவையெல்லாம் சாத்தியமானதற்குக் காரணம் தொழில்நுட்ப வளர்ச்சிமட்டுமல்ல, இந்த சேவையை வழங்கியவர்கள் கடைப்பிடித்துவந்த கோட்பாடாகும். அந்தக் கோட்பாடு என்னவென்றால், இந்த ஊடகத்தின் வாயிலாக பரிமாறப்படும் தகவல்கள் மற்றும் அதன் போக்குவரத்து அனைத்தும் சமமாக, எந்தவித பாகுபாடுமின்றி நடத்தப்படவேண்டும் என்பதாகும். இணையதள சேவை வழங்குவோர் (இன்டெர்நெட் சர்வீஸ் புரொவைடர்கள் (ISP – Internet Service Providers) இந்த கோட்பாட்டுபடி நடக்கவேண்டும். ஏனெனில் யார்வேண்டுமானாலும் எங்குவேண்டுமானாலும் தங்கள் வலைதளத்தை அமைத்து தகவலை உலகெங்கும் அளிக்க இணையதளம் ஒரு திறந்தவெளி மேடையாக உருவாக்கப்பட்டதாகும். இந்த "திறந்தவெளித்தன்மை" என்பதன் பொருள், உலகெங்கும் உள்ள இணையதள பயனீட்டாளர்கள் டெக்ஸ்ட், இமேஜ், வாய்ஸ் அல்லது வீடியோ போன்ற தாங்கள் விரும்பும் எந்த வடிவத்திலும் தகவல் பரிமாற்றத்திற்கு இணையதளத்தை இலவசமாகப் பயன்படுத்தலாம் (ISPs) இணையதள சேவை வழங்குவோர் பரிமாறும் தகவல்களை இந்த வடிவங்களின் அடிப்படையில் பிரிவினை செய்வதற்கோ, ஒரு ஐஎஸ்பி காரரிடமிருந்து மற்றொருவரை பிரித்துப் பாரபட்சம் பார்ப்பதற்கோ இதன் அடிப்படையில் வெவ்வேறு கட்டணங்களை நிர்ணயிப்பதற்கோ விதிப்பதற்கோ அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதாகும்.

### இணையதள சமநிலை என்றால் என்ன?

மிகச்சரியாக, இணையதள சமநிலை என்பது மேலே விவரித்ததேயாகும். சமுதாயத்தில் நன்கு நிறுவப்பட்டு நடைமுறையில் உள்ள 'பொது வழித்தளம்' விதிகளை இணையதளத்திற்கு அமுலாக்கி அதன் சுதந்திரத்தையும் திறந்தவெளித்தன்மையையும் பராமரிப்பதையே இது குறிப்பிடுகிறது. அனைத்து பயனாளிகளுக்கும் பயன்படக்கூடிய நெட்வொர்க்கை வழங்கும் உடைமையாளர்கள், தகவல் பரிமாற்றத்தில் கைவைப்பதோ, அவற்றின் வேகத்தை குறைப்பதோ நிறுத்துவதோ செய்வதற்கு பொது வழித்தளம் தடைவிதிக்கிறது. வேறு சிலர் உளவுபார்த்து தகவல்களைத் திருடுவதை தடுக்க, அல்லது தகவல் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க என்பன போன்ற நிர்வாகக் காரணங்களுக்காக வேண்டுமானால் உடைமையாளர் குறுக்கிடலாம். பொது வழித்தளம் என்ற கருத்து மிகப் பழமையானது, அதன் விதிகளும் மரபும் நூற்றாண்டுகள் பழமைவாய்ந்தது. பொது வாழ்க்கைக்கும் பொருளாதாரத்திற்கும் மையமாக விளங்கும் வசதிகளான கணவாய்கள், கால்வாய்கள், ரயில்பாதைகள், நெடுஞ்சாலைகள், தந்தி, தொலைப்பேசி என எல்லாவற்றிலும் அனைவரும் பயன்படுத்தும்படியான பொது வழித்தள விதிகள் வழிவழியாக பின்பற்றப்பட்டு வந்துள்ளன. எனவே, யாருக்கெல்லாம் இணையதளம் வழித்தடத்தை வழங்க உரிமம் கொடுக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் அனைத்து பொது மக்களையும் சமமாக எந்த பாகுபாடுமின்றி நடத்த வேண்டும் என பொதுவான தார்மீக நெறி கோருகிறது. இந்த பொது வழித்தட விதிகள், பிராட்பாண்ட் இன்டெர்நெட் உட்பட அனைத்து தகவல்தொடர்பு அமைப்புகளாலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது இயல்பான எதிர்ப்பார்ப்பாகும். ஆனால் இந்த "தடையற்ற" மற்றும் "பாகுபாடற்ற" இணையதள வடிவம் தற்போது தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றது. தற்பொழுது இணையதளத்தை வேகமான வழி, மெதுவான வழி என இரண்டாக பாகுபடுத்த பரிந்துரை நடைபெறுகிறது. இந்த பரிந்துரை வெற்றிபெற்றால் அதிக விலை கொடுக்கும் பணக்கார கம்பெனிகள் வேகமாக தகவல்களை பதிவிரக்கம் செய்துகொள்ளும். ஏனையோருக்கு மெதுவான வேகமே கிடைக்கும்.

### இணையதள சமநிலை மீது ஏன் இந்தத் தாக்குதல்?

பொருளாதாரத்தை யார் ஆதிக்கம் செலுத்தி கட்டுப்படுத்துகிறார்களோ அவர்கள்தான் வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும், அறிவியல் பயன்பாடு உட்பட, கட்டுப்படுத்துகிறார்கள் என்பதை சமூக அறிவியல் மாணவர்கள் எவரும் அறிவர். நமது சமுதாயம் முதலாளித்துவ சமுதாயமாகும். இங்கு முதலாளித்துவ வர்க்கம் அதிகாரத்தில் இருக்கின்றது. அதிகபட்ச இலாபம் ஈட்டுவது ஒன்றுதான் முதலாளிகளுக்கு முக்கியமேதவிர, பெரும்பாலான மக்கள் அதனால் என்ன பாதிப்புக்கு ஆளாவார்கள் என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. நவீன அறிவியலின் வளர்ச்சியின் பரிசான இணையதளம் இதுவரை அனைவருக்கும் எந்த விலையும் இன்றி கிடைத்து வந்தது. ஆனால் இலாப வேட்கை கொண்ட முதலாளித்துவ வர்க்கம் இணையதளத்தின் இந்தப் பயன்பாட்டைக் குறுக்கி, அதிக விலை கொடுப்பதன் மூலமாக பணக்கார கார்ப்பொரேட் நிறுவனங்கள் அல்லது சில தனிநபர்கள் மட்டும் பயனடையும் விதத்தில் புதிய நடைமுறைகளைப் புகுத்த முயல்கின்றது. இன்டெர்நெட்டின் இதுவரையிலான சமத்துவக் கொள்கை முதலாளித்துவத்திற்கு விரும்பத்தகாததாக இருந்தபோதிலும், உண்மை என்னவென்றால், முதலாளித்துவம் இதிலிருந்து ஏராளமான நன்மைகளைப் பெற்றுள்ளது. அதற்குக் காரணங்கள்;

1. தகவல்களின் உருவாக்கம், தொகுப்பு, பரப்புதல், மற்றும் சேர்த்துவைத்தல் (ஸ்டோரேஜ்) ஆகியவை மிக வேகமாக குறைந்த செலவில் நடைபெற்றதால் முதலாளிகளுக்கு குறைந்த உழைப்பும் குறைந்த நிர்வாகச் செலவுமே தேவைப்பட்டது. இதனால் பணிக்கு அமர்த்தவேண்டிய தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்தது.

2. வணிகவளாக கட்டிடங்களில் நடக்கும் வர்த்தகத்தைவிட ஆன்லைன் வர்த்தகம் பெரிய அளவில் ஏராளமான இலாபத்தைக் குவித்தது.

3. இணையதளமும் அதன் பயனாளிகள் எண்ணிக்கையும் பெருகியதால் கூகிள், ஃபேஸ்புக், யாகூ (Google, Facebook, Yahoo) போன்ற இலவச தகவல் சேவை இணையதள கம்பெனிகள் விளம்பரங்களின் மூலம் ஏராளமாக பொருளீட்ட முடிந்தது. அதேபோன்று ஏர்டெல், ரிலையன்ஸ் போன்ற இன்டெர்நெட் சர்வீஸ் புரொவைடர்ஸ் (IPSs) நிறுவனங்கள் டேட்டா சர்வீஸ் கட்டண வசூல் மூலம் மிகப்பெரிய இலாபமீட்டின.

சந்தை சுருக்கம், உலக முதலாளித்துவத்தை தீராத சந்தை நெருக்கடியில் சிக்கவைத்துவிட்ட நிலையில், முதலாளிகளுக்கு முதலீடு செய்து இலாப மீட்ட இணையதளம் புதிய சந்தர்ப்பங்களை உருவாக்கியது. நுகர்வோரை நேரடியாக தொடர்பு கொண்டு பொருட்களை வியாபாரிகள் விற்கமுடிந்ததால் இ–காமர்ஸ் என்ற புதிய சொல் உருவானது. வலைதள மார்க்கெட்டிங் முறை அதிகமாக கடைப்பிடிக்கப்பட்டது. Ebay, Amazon, Alibaba, Flipkart போன்ற புதிய வலைதள முகவர்கள் தோன்றி நெட் வணிகத்தின்மூலம் ஏராளமாக இலாபம் ஈட்டுகின்றன. ஆரம்பக் காலத்தில் "டாட் காம்" என அழைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப நீர்க்குமிழி ஒரு பெரிய மாயையை உருவாக்கியபோதிலும் நீண்ட நாட்களுக்கு நீடிக்கவில்லை. செய்யப்பட்ட முதலீடுகள் எதிர்ப்பார்த்த இலாபத்தைக் கொடுக்க வில்லை. இருப்பினும் மொத்தத்தில் முதலாளித்துவம் இணையதள தொழில்நுட்பத்தால் பயனடைந்துள்ளது.

ஆனால், முதலாளித்து நெருக்கடி தற்போது ஒவ்வொரு மணிப்பொழுதும் தோன்றும் அம்சமாகும் என இக்காலக்கட்டத்தின் முன்னணி மார்க்சிய சிந்தனையாளர்களுள் ஒருவரும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் சிந்தனையிலிருந்து நாம் அறிவோம். நெருக்கடியிலிருந்து தப்பிப்பதற்காக முதலாளித்துவம் எடுக்கும் நடவடிக்கைகள் அதனை மேலும் புதிய பெரிய நெருக்கடியில் தள்ளுகின்றது. இணையதள விஷயத்திலும் தற்போது இதுவே நடந்துள்ளது. இ–வர்த்தகத்திலும் இலாபம் குறையத்துவங்கி விட்டதால் நெருக்கடியில் மூழ்கியிருக்கும் முதலாளித்துவம் அதிகபட்ச இலாபமீட்ட புதிய வழி இருக்கிறதா எனத்தேடுகின்றது. எனவே இதுவரை தடையின்றி தடையற்ற சேவையை வழங்கிவந்த இணையதள வசதியை எடுத்துவிட்டு அதன் பயன்பாட்டுக்கு பல அடுக்கு முறையிலான மாறுபட்ட கட்டணங்களை விதித்து பெரிய ஐடி கம்பெனிகளின் வசதிக்காக பொதுமக்கள் பயன்பாட்டைக் குறுக்க நினைக்கின்றனர். ஆக, தடையற்ற, பாகுபாடற்ற வடிவத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இணையதளத்தின் மீது தற்போது தாக்குதல் வந்துள்ளது.

இந்தப் பொருளாதாரத் தேவை அல்லாமல், இணையதளத்தை கட்டுப்படுத்த வேறு சில முக்கிய அரசியல் காரணங்களும் இருக்கின்றன. முதலாளித்துவம் தன் வாழ்நாளை நீட்டிப்பதற்காக மக்களின், குறிப்பாக இளைஞர்களின் தார்மீக முதுகெலும்பை முறிக்க நினைக்கின்றது. அதற்கு, ஆபாச படங்கள், பாலியல் தூண்டல்கள், வன்முறை மற்றும் அது போன்ற மோசமான விஷயங்களை பரப்ப இணையதளம் ஒரு வசதியான ஊடகம் என்பதைக் கண்டுள்ளது. அதேசமயம் உலகத்தின் பல்வேறு பகுதி மக்களும் அரசாங்கங்களின் அநியாயமான

தொடர்ச்சி 6ம் பக்கம்

# இணையதள சமநிலையை சட்டமாக்கப் போராடுவோம்

*5ம் பக்கத் தொடர்ச்சி*

கொள்கைகளை எதிர்த்து ஜனத்திரளாக எழுச்சி பெற்று போராட இணையதளம் வசதி செய்து விட்டது. ஆளும் வர்க்கத்திற்கு எதிராக போராட்டங்களை வளர்த்தெடுக்க மக்கள் கைகளில் இணையதளம் ஒரு சக்திவாய்ந்த ஊடகமாக நிலவுகிறது. இதற்கான எடுத்துக்காட்டுகளை முன்னமே குறிப்பிட்டுள்ளோம். சமூகநீதிக்கான கருத்துக்களை துரிதமாகவும் அழுத்தமாகவும் பெரிய அளவில் மக்களிடம் பரப்ப மக்களுக்கு இது துணைசெய்கிறது. ஆகவே, மக்கள் ஆன்லைனில் சுதந்திரமாக பரிமாறிக்கொள்வதன் மூலம் விமரிசனப்பூர்வமான கருத்துக்கள் பரவுவதை நிறுத்தி எதிர்ப்புகளைத் தடுக்க ஆளும் வர்க்கம் விரும்புகிறது.

### இந்தியாவில் இணையதள சமநிலை மீதான தாக்குதல்

இணையதள சமநிலையை (நெட் நியூட்ராலிடி) கெடுக்கும் முதல் முயற்சி இந்தியாவில் டிசம்பர் 2014ல் துவங்கியது. அப்போது ஏர்டெல் நிறுவனம் "வாய்ஸ் ஆன் இன்டெர்நெட் புரோடோகால் (VoIP)" சேவைகளான ஸ்கைப், வாட்ஸப், வைபர் போன்ற சேவைகளுக்கு அதிக கட்டணம் விதிக்க முடிவுசெய்தது. இந்த சேவைகள் இலவசமாகக் கிடைப்பதால் கைபேசி மூலம் SMS அனுப்பும் பழக்கம் மக்களிடம் குறைந்து தங்களுக்கு வருமானம் குறைவதாக இந்நிறுவனம் காரணம் கூறியது. ஆனால், புள்ளிவிவரங்களைச் சற்றே நோக்கினால் இன்டெர்நெட் டேட்டா சேவைகளினால் இவர்களின் வருமானமும் இலாபமும் தொடர்ந்து பெருகிக் கொண்டுதான் இருக்கின்றன என்பதை அறிய முடியும். எனவே அவர்களின் வாதம் செல்லாது. இணையதளத்தின் மீது கட்டுப்பாட்டை ஆளும் வர்க்கத்தின் கைகளில் கொடுக்கமுடியாது. இலாபப் பசிகொண்ட டெலிகாம் பகாசுரர்கள் நுகர்வோர் மீது என்ன தொழில்நுட்பத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதின்மீது ஆதிக்கம் செலுத்த அனுமதிக்க முடியாது. பின்னர் ஏப்ரல் 2015ல் "ஏர்டெல் ஜீரோ" என்ற திட்டத்தை ஏர்டெல் அறிவித்தது. இதன்படி, தங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் கம்பெனிகளுக்கு நெட் தொடர்பு கொள்வதில் முன்னுரிமை வழங்கப்படும் என்றது. உடனே இந்தத் திட்டத்தில் ஃபிளிப்கார்ட் இ–காமர்ஸ் நிறுவனம் (Flipkart) சேர்வதாக அறிவித்தது. இதன் மூலம் பிற இணையதள முகவரிகளைவிட ஃபிளிப்கார்ட் அதிக வேகத்தை இணையதளத்தில் அனுபவிக்கும். இதற்கு மக்களிடம் கடும் எதிர்ப்பு எழுந்தது. இம்முயற்சியை உடனே தடுக்காவிட்டால் நாளடைவில் "தடுக்கப்பட்ட வெப்சைட்டுகள்", "வேகமான வழித்தடங்கள்" என இருவேறு வகைகள் தவிர்க்கயியலாமல் உருவாகிவிடும். ஏர்டெல், டொகொமோ போன்ற டெலிகாம் கம்பெனிகள் தீர்மானிக்கக் கூடிய சில தகவல் தீவுகள் மட்டுமே பயனாளிகள் அனுகமுடியும். கடல்போன்று விரிந்து இருக்கும் அனைத்து தகவல்களையும் தற்போது பெறுவது போன்று அடையமுடியாது. விக்கிபீடியா போன்ற சிறிய நிறுவனங்கள் வெளிப்படையாக இலவசமாக தரும் தகவல்கள் கிடைக்கும் வேகம் மிகவும் மெதுவாகிவிடும். இவர்கள் பிழைக்க வேண்டுமானால் ஏர்டெல் போன்று ஏதாவது பிற கார்ப்பொரேட் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டியிருக்கும்.

### இணையதள சமநிலையைப் பாதுகாக்க சட்டமியற்ற மக்கள் நிர்ப்பந்திக்கவேண்டும்

மக்களின் ஏகோபித்த எதிர்ப்பால் ஏர்டெல் முன்மொழிந்த ஒப்பந்தத்திலிருந்து ஃபிளிப்கார்ட் விலகிக்கொண்டுவிட்டது. நமது நாட்டின் இளைஞர்களும் அறிவியல் சமூகமும் இந்த எதிர்ப்பு இயக்கத்தில் முன்னணியில் நின்று போராடியது பாராட்டத்தக்கதாகும். இணையதளத்ததை இலவசமாகவும் சுதந்திரமாகவும் வைத்திருக்கச் செய்ய கிட்டத்தட்ட 10 இலட்சம் பேர் பங்கு கொண்டு டெலிகாம் ரெகுலேட்டரி அத்தாரிடி ஆஃப் இந்தியாவை (TRAI) கோரி வெற்றிபெற்றனர். "வாய்ஸ் ஆன் இன்டெர்நெட் புரோடோகால் (VoIP)" சேவைகளான ஸ்கைப், வாட்ஸப், வைபர் போன்ற சேவைகளுக்கு 5 மடங்கு எக்ஸ்ட்ராவாக கட்டணம் விதித்ததை மக்கள் எதிர்த்ததால் ஏர்டெல் அத்திட்டத்தை மறுபரிசீலனை செய்வதாகச் சொல்லி பின்வாங்கியது. ஆயினும் முற்றிலுமாக அதை கைவிட்டுவிடவில்லை.

இதுபோன்ற டெலிகாம் பகாசுரர்களின் தொடர்ந்த அழுத்தத்தால் (TRAI - டிஆர்ஏஐ) TRAI அவர்களுக்கு மக்கள் சுதந்திரமாக இணையதளத்தைப் பயன்படுத்துவதைப் பாதிக்ககூடிய வகையில் இணையதள சமநிலையை மீற அனுமதிகொடுக்க திட்டமிட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. மக்களின் கருத்துக்களை சேகரிப்பதாகச் சொல்லி விவாத கட்டுரையை மார்ச் 2015 ல், டிஆர்ஏஐ (TRAI) வெளியிட்டது. இது கண்துடைப்பு நடவடிக்கை என பலரும் கருதுகின்றனர். முன்பெல்லாம்கூட அரசாங்கம் 'புதிய தேசியக் கல்விக்கொள்கை', 'மரபணு மாற்றப்பட்ட விதைகள் கொள்கை' என்ற பிரச்சினைகளிலும் இதுபோன்ற விவாதக் கட்டுரையை சுற்றுக்கு விட்டது. ஆனால் மக்களிடம் பெறப்பட்ட கருத்துக்களை ஒதுக்கிவிட்டு அரசாங்கம் முன்கூட்டியே முடிவு செய்ததைத் தான் நடைமுறைப்படுத்தியது. அதேபோல் இதிலும் நடக்கக்கூடும்.

மோடி அரசாங்கம், ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் வர்க்க நலங்களுக்கு வெளிப்படையாகவும் மிகவேகமாகவும் சேவை செய்து வருவதால், டெலிகாம் கன்பெனிகளின் கோரிக்கைகளுக்கு சாதகமாகவே செயல்படும் என்ற அச்சம் மக்களுக்கு இருக்கின்றது. ஒருபுறம் "டிஜிட்டல் இந்தியா" என்று வாய்கிழியப் பிரச்சாரம் செய்யும் பிரதமர் மோடி, மக்களின் கடும் எதிர்ப்பைக் கண்டும் இணையதள சமநிலை என்ற முக்கியமான விஷயத்தில் வாயைத் திறக்க மறுக்கிறார்.

இணையதளத்தை பயன்படுத்தும் பொதுமக்களின் தகவலறியும் உரிமையைத் தக்கவைத்து பாதுகாக்க, இணையதள சமநிலையை சட்டமாக்க வேண்டும் என நாம் கோரிக்கை வைக்கின்றோம். யுஎஸ்ஏ, பிரேசில், ஹாலந்து, சிலி ஆகிய நாடுகள் இணையதள சமநிலையை சட்டமாக்கியுள்ளதை இங்கு குறிப்பிடவேண்டும். அந்நாடுகள் ஏதோ பெரியமனது வைத்து இப்படி செய்துவிடவில்லை. அங்கும் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பினால்தான் அவ்வாறு செய்தார்கள். நமது நாட்டிலும் இணையதள சமநிலையை ஒரு சட்டமாக்க, மக்களை ஒன்று திரட்டி ஒரு பேரியக்கத்தின் மூலம் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

# யாகூப் மேமனின் தூக்கும் . . .

*4ம் பக்கத் தொடர்ச்சி*

குற்றம் சாட்டப்பட்டவர் இந்து மதத்தை | இந்து அமைப்பைச் சேர்ந்தவராக இருந்தால் அரசாங்கம் மிகவும் மென்மையாகவும் அவரைப் பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுப்பதை இவை எடுத்துக்காட்டவில்லையா? ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர் முஸ்லீம் மதத்தை சேர்ந்தவராக இருந்தால் அவரை குற்றவாளியாக நிரூபிப்பதற்கும் மரண தண்டனை உள்ளிட்ட கடுமையான தண்டனைகள் பெற்றுத்தருவதற்கு கடும் பிரயத்தனம் செய்யப்படுகிறது. இவை எல்லாம் குற்ற வழக்குகளைக் கையாள்வதில் பாஜக அரசாங்கம் மதஅடிப்படையில் பாரபட்சமாக செயல்படுவதைக் காட்டவில்லையா? சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று எப்படிக் கூற முடியும்? பூர்ஷ்வா அரசியல்வாதிகளும் அமைச்சர்களும் அடிக்கடி 'சட்டம் தன் கடமையைச் செய்யும்' என்று தம்பட்டமடிப்பது வெற்று வார்த்தைகளாக இல்லையா?

குற்றமுள்ளவன் நெஞ்சு குறுகுறுக்கும் என்பது பழமொழி. கடுமையான விமர்சனங்கள் எழுவதால், பாஜக தலைமை தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக, யாகூப் மேமனுக்கு வழங்கப்பட்ட மரணதண்டனைக்கு மதச்சாயம் பூசப்படுவதாகவும் நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிக்கக் கூடாது என்றும் வாதாடுகிறது.

### நியாயம் மற்றும் நீதி பற்றியே கேள்வி, நீதிமன்றத் தீர்ப்பு பற்றி அல்ல

இங்கே நீதிமன்றத் தீர்ப்பு பற்றி கேள்வி எழுப்பப்படவில்லை. நியாயம் மற்றும் நீதி பற்றியே கேள்வி எழுந்துள்ளது. சட்டம் அனைவருக்கும் சமம் என்றால் ஒவ்வொரு நாளும் வழங்கப்படும் தீர்ப்புகள் வசதி படைத்தவர்கள், பணபலம் அதிகாரபலம் படைத்தவர்களுக்கு ஆதரவாக வருவதை நாட்டு மக்கள் காண்பது ஏன்? பணமும் 'தொடர்புகளும்' இருந்தால்தான் நீதிமன்றத்தை அணுகவும் நீதியைப் பெறவும் முடியும் என்ற கருத்து சாதாரணமாகப் பரவலாக இருப்பது ஏன்?

சட்டமும் மத்தியப் புலனாய்வு அமைப்புகள் சமீப கால நடவடிக்கைகள் பித்தலாட்டக்காரர்கள், கொள்ளையடிப்பவர்கள், அதோடு புகழ்பெற்றவர்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்கும் அரசியல் அதிகாரமிக்கவர்கள் மீது மிகவும் மென்மையான போக்கைக் கடைபிடிப்பதை எடுத்துக்காட்டுகின்றன. இவர்களுக்கு சாதகமான தீர்ப்பைப் பெறுவதற்காக நீதித்துறையின் நடைமுறைகள் அத்துமீறப்படுகின்றன. இவை எல்லாம் நீதித்துறையின் பாரபட்சமின்மை மற்றும் சுதந்திரமான செயல்பாட்டின் மீதே கேள்விகளை எழுப்பியுள்ளது. தனிப்பட்ட ஆதாயங்களுக்காக அதிகாரப் பதவிக்கு வருவதற்காக சாதகமான தீர்ப்புகள் வழங்கப்படுவது அதிகரித்து வருகின்றதோ என்ற சந்தேகங்களும் எழுந்துள்ளன. நீதித்துறை அமைப்பில் உள்ளவர்களே இக்குற்றச்சாட்டை எழுப்புகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் ஆட்சியில் இருப்பவர்களின் விருப்பங்களுக்கு சரணடைந்து தீர்ப்புகளை மாற்றுவதற்கும் உற்பத்தி செய்வதற்குமான வாய்ப்புகளை ஒதுக்கித் தள்ள முடியாது.

எனவே நடைபெறும் சம்பவங்களையும் உண்மைகளையும் வெவ்வேறு கோணங்களில் கணக்கிலெடுத்துக் கொண்டு தர்க்கரீதியாக அலசி ஆராய்ந்து பார்த்தால் அப்சல் குருவும் யாகூப் மேமனும் அரசியல் படுகொலை செய்யப்பட்டுள்ளனரே தவிர நீதியின் இயற்கையான செயல்முறைப்போக்கினால் தண்டனை வழங்கப்படவில்லை என்ற முடிவிற்கே ஒருவரை இட்டுச்செல்லும். தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற பெயரில் நடத்தப்படும் இத்தகைய அரசியல் படுகொலைகள், மத சிறுபான்மையினரைத் தீவிரவாதிகளாகச் சித்தரித்து அவர்களுக்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரத்தை மேற்கொண்டு பெரும்பான்மை இந்து மதத்தவர் மத்தியில் நஞ்சை விதைக்கும் நயவஞ்சகத் திட்டத்தோடு செயல்பட்டுவரும் ஆர்எஸ்எஸ்–பாஜக போன்ற முற்றிலும் மதவாத வெறிபிடித்த அமைப்புகளுக்கு பலனளிப்பதாக அமைந்துவருகிறது.

இப்படி அரசாங்கம் மதசார்புடைய வழியில் செயல்படுகையில் இது எதிர் மதவெறி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும், தீவிரவாத அமைப்புகள் மதவெறியைத் தூண்டிவிட்டு மக்களைக் குழப்பிவிட்டு அதன்மூலம் பலம் பெற்று எதிர்தாக்குதல் அல்லது பலிவாங்குதல் என்ற பெயரில் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கும் சாதகமாக இருப்பது மற்றொரு கவலையளிக்கும் விஷயமாகும்.

### மதவாதம் மற்றும் மதவெறிக்கும் மக்கள் பலியாகிவிடக்கூடாது

முதலாளித்துவத்தின் கொடூரமான அடக்குமுறையின் சக்கரத்தில் சிக்கி அழுந்திவரும் சாமானிய மக்கள்தான் இதில் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக நிற்பதற்கு மக்களிடையே பரஸ்பர நம்பிக்கை, சகோதரத்துவம், ஒத்துழைப்பு, ஒருவர் மீது ஒருவருக்குப் பாசம் மற்றும் இளகிய மனம் ஆகியவை தேவைப்படுகிறது. ஆனால் மக்களின் இந்த ஒற்றுமையைக் குலைப்பதற்கு ஆளும் முதலாளித்துவ வர்க்கமும் அதன் அடிவருடி அரசாங்கங்களும் பல்வேறு பிரித்தாளும் சூழ்ச்சியை மேற்கொள்கின்றனர். அதற்காக ஒருதரப்பு மக்களுக்கு எதிராக மற்றொரு தரப்பு மக்களைத் தூண்டிவிடுவது, மதப் பிளவைத் தூண்டுவது, அதோடு தேவைப்படும் போதெல்லாம் மக்களிடையே மோதலைத் தூண்டிவிட்டு கலவரங்கள் மூலம் ரத்த ஆறு ஓடச் செய்வது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்மூலம் மக்கள் ஒருபோதும் ஒன்று சேரமுடியாத சூழ்நிலைமையை உருவாக்கி வருகின்றனர். இந்த சூழ்ச்சிக்கு மக்களும் பலியாகி வருவது மிகவும் வருத்தத்திற்குரியது. எனவே ஜனநாயக கோட்பாடுகளை மதிப்பவர்கள், மதச்சார்பற்ற அணுகுமுறையையும் உழைக்கும் மக்களின் அனைத்துத் தரப்பு மக்களிடையேயும் நல்லுறவையும் விரும்பக்கூடிய அனைவரையும் இதுகுறித்து ஆழமாக சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

(*தகவல் ஆதாரம் :* The Guardian 10-2-13, The Hindu 10-2-13, India Resists 09-2-13, Deccan Herald 26-07-15, Business Standard 26-7-15, Sify News 29-7-2015, www.dailyo.in, Hindustan Times 09-8-2015, Frontline - 21-8-2015, NDTV 30-6-15 and 11-08-15)

# மேற்கு ஆசியாவின் புலம்பெயர்வு சோகப் பிரச்சினை ...

*2ம் பக்கத் தொடர்ச்சி*

மற்றும் பாதுகாப்பு ஆணையத்தின் எம்பி மஜித் அல்–கராவி கூறினார். நீதி கண்காணிப்பு (Judicial Watch) என்ற பொதுநல சட்ட அமைப்பு திரட்டிய அமெரிக்க அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட ரகசிய ஆவணங்களிலிருந்து, சிரியா அதிபர் ஆசாத்தை பதவிநீக்கம் செய்வதற்காக மேற்கத்திய அரசாங்கங்கள் அல் கொய்தா மற்றும் இஸ்லாமிய பயங்கரவாதக் குழுக்களுடன் வேண்டுமென்றே கூட்டு வைத்துள்ளன என்று தெரியவருகிறது. இவ்வாறு செய்வதால் அது ஐஎஸ்ஐஎஸ் உருவாவதற்கு வழிவகுக்கும் என்று தெரிந்தே இதை செய்துள்ளன என்பது அம்பலமாகியுள்ளது. இந்த யுக்தியைப் பின்பற்றினால் அது 'இஸ்லாமிய அரசு' உருவாவதற்கு வழிவகுக்கும் என்று பென்டகனுக்கு முன்கூட்டியே தெரியும் என்றபோதிலும், அந்த தந்திரத்தின் மூலம் 'சிரிய ஆட்சியை தனிமைப் படுத்தும்' வாய்ப்பை தந்திரமாகப் பயன்படுத்தலாம் என்று கூறியிருப்பதை இந்த ஆவணம் வெளிக் கொணர்ந்துள்ளது. ஆக இன்று ஐஎஸ்ஐஎஸ் ஐ எதிர்த்துப் போராடுகிறோம் என்று கூறும் இதே அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படைதான், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஆசாத்தை சிறுமைப் படுத்தி அதிகாரமிழக்கச் செய்வதற்காக 'ஆசாத்தின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக உருவான ஆயுதம் தாங்கிய இஸ்லாமிய பயங்கரவாதக் குழுவான சலிஃபிஸ்ட் குழு' உருவாவதை வரவேற்றுள்ளனர் என்பதை இந்த ஆவணம் தெளிவுபடுத்துகிறது.

அமெரிக்க ஆதரவு சிரியா கிளர்ச்சியாளர் களுக்கு உதவியை இஸ்ரேலும் வழங்கியுள்ளதை இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் மோஷே யா அலோன் அவர்களும் உறுதிப்படுத்தியுள்ளார். இடைத்தரகர்கள் மூலமாகவும் தங்களிடம் ஆயுதங்கள் வாங்கும் சில அரபு நாடுகள் மூலமாகவும் ஜெர்மனி போன்ற ஐரோப்பிய வல்லரசுகள் கூட ஐஎஸ்ஐஎஸ்க்கு ஆயுதங்களை விற்றிருக்கின்றன என்ற அதிர்ச்சியான தகவல்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. இது இப்படித்தான் நடந்திருக்க வேண்டும், வேறு விதமாக இருந்திருக்க முடியாது. ஏனென்றால் ஐஎஸ்ஐஎஸ்க்கு ஆயுதத் தொழிற் சாலையும் இல்லை, அதற்கென ஒரு நிரந்தரமான பிராந்திய இடமும் இல்லை. ஏகாதிபத்திய ஆயுத வியாபாரிகள் அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்காமல் அவர்கள் பின் எப்படி இந்த அளவு மிகவும் நவீன ஆயுதங்கள் அதிக எண்ணிக்கையில் வைத்திருக்க முடியும்?

அவர்கள் கைப்பற்றியுள்ள எண்ணெய் கிணறு களிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயை விற்று வரும் பணத்தில் தான் அவர்கள் ஆயுதங்களை வாங்குகின்றனர். ஆக, ஒன்று உறுதியாகிறது. இன்று மிகவும் நாசகார தீய சக்திகளாக, கொடூரமான பிற்போக்குவாதிகளாக, மனிதாபிமான உணர்வே அற்றுப்போன, பைத்தியகாரத்தனமான, காட்டு மிராண்டித்தனமாக பெண்களை வெறுத்தல் அதோடு பெண்களிடம் குரூரமாக நடத்தல், நஞ்சு நிறைந்த பிரிவினைவாதம் மற்றும் அப்பாவி களைக்கூட விடாமல் கொத்துக்கொத்தாக கொலை செய்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டுவரும் ஐஎஸ்ஐஎஸ் அல்லது அடிப்படை வாத சக்திகள் எல்லாம் ஏகாதிபத்தியங்களின், குறிப்பாக உலக ஏகாதிபத்தியத்தின் தலைவனாகத் திகழும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் உருவாக்கமே. ஐஎஸ்ஐஎஸ் மற்றும் இதர அடிப் படைவாத சக்திகளின் பயங்கரவாதத்திற்கும் சர்வாதி காரத்திற்கும் எதிராக தீவிரமாகப் போராடி வருவது போல் காட்டிக்கொள்ளும் அமெரிக்க ஏகாதிபத்தி வாதிகளும் அவர்களது கூட்டாளிகளும்தான் உண்மையில் தங்களது நயவஞ்சக திட்டங்களுக்கு எதிராக ஒடுக்கப்படும் மக்கள் ஒன்றிணைந்து கிளர்ந்தெழுவதைத் தடுத்து நிறுத்தும் நோக்கத் தோடு சாமானிய மக்களிடையே ஒற்றுமையை சீர்குலைப்பதற்காக மதம், பிரிவு, இடம், இனம் இதுபோன்ற பல பிரச்சினைகளின் அடிப்படையில் பிளவை ஏற்படுத்துவதற்காக இதுபோன்ற பயங்கரவாதக் குழுக்களை தொடர்ந்து உருவாக்கி வளர்த்து வருகின்றனர்.

### மேற்கு ஆசியாவில் கொத்துக்கொத்தாக மக்கள் வெளியேறுவதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளே பொறுப்பு

அமெரிக்கா, யுகே போன்ற ஏகாதிபத்திய வல்லரசுகள் தான் மத மற்றும் பிரிவினைவாத பிளவுகளை ஒரு நாட்டில் தூண்டிவிட்டு, பின்னர் ஏகாதிபத்திய ஊடுருவலுக்கும் அதையே சாக்காக வைத்துக்கொள்கின்றனர் என்பதை அமைதியை நேசிக்கும் ஜனநாயக எண்ணம் கொண்ட உலக மக்கள் அனைவரும் அறிவர்.

ரோமானியா, முந்தைய யூகோஸ்லேவியா, செர்பியா, குரோயோசியா, போஸ்னியா, கம்போடியா, ருவாண்டா, சோமாலியா இன்னும் இதுபோன்ற பல நாடுகளில் திட்டமிட்டு இன மோதல்களை உருவாக்கியதை நாம் கண்டோம். தற்போது அகதிகள் வெளியேறுவதைக் 'ஆதாரமாகக்' காட்டி 'தீயசக்தி ஆசாத் ஆட்சி' மீது புதுப்பிக்கப்பட்ட தாக்குதல் களை நடத்துவதற்காக சிரியாவின் மீது குண்டு வீசுவதற்கு யுகே பாராளுமன்றம் கருதிவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பொதுமக்கள் வெளியேறுவதற்கு மனிதாபிமானமற்ற வெறிபிடித்த ஐஎஸ்ஐஎஸ் தான் காரணம் என்பது உண்மைதான். ஆனால் ஐஎஸ்ஐஎஸ் என்பதை உருவாக்கியதே அமெரிக்க ஏகாதிபத்தியம்தானே. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற ஏகாதிபத்திய வல்லரசு களும் அவர்களது பிராந்திய கூட்டு நாடுகளும்தான் தொடர்ச்சியாக மற்ற நாடுகளின் விவகாரங்களில் ஊடுருவி அங்குள்ள கிளர்ச்சி சக்திகளுக்கு நிதி உதவியும், பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கி வரு கின்றன என்பதை சமீபத்தில் கசிந்துள்ள அமெரிக்க உளவு ஆவணங்கள் அம்பலப்படுத்தியுள்ளன.

ஆக ஏகாதிபத்தியங்கள் நடத்தும், அதிலும் குறிப்பாக அமெரிக்கா நடத்தும் அல்லது அதன் ஆதரவோடு நடக்கும் போர்களும், பொருளாதாரத் தடைகளும் திட்டமிட்ட ஆட்சி தகர்ப்புகளும் சேர்ந்து தான் வறுமையும் அச்சமும் அதிகரிப்பதற்குக் காரண மாகி, இதனால்தான் இன்று ஐரோப்பிய எல்லை களிலும் மெடிடேரியன் கடலைத் தாண்டியும் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான அகதிகள் அலையலையாக வெளியேறுவதற்குக் காரண மாகும். இன்று மக்கள் வெளியேறி ஓடிவரும் பல்வேறு அரபு நாடுகளின் அமெரிக்க ஏகாதி பத்தியம் நடத்திய ஒவ்வொரு சட்டவிரோத ராணுவத் தலையீடுகளிலும் அமெரிக்காவோடு இணைந்து பெரிய ஐரோப்பிய–நேட்டோ நாடுகள் செயல் பட்டுள்ளன. எனவேதான் ஒரு கட்டுரையாளர் 'ஆம், ஐஎஸ்ஐஎஸ், கொடூரமானது, ஆனால் அமெரிக்கா அதைவிடக் கொடூரமானது' என்று சரியாகக் கண்டனம் தெரிவித்துள்ளார். அகதிகள் குவிவதை அச்சுறுத்தும் ஒரு மிகப்பெரிய பிரச்சி னையாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பூதாகர மாகப் பேசும் மேற்கத்திய வல்லரசுகள்தான் இந்த உலக அகதிகள் பிரச்சினைக்கே காரணம் என்பதைக் கண்டு தான் தலைகுனிவதாக பிரான்சு நடிகரும் பிரான்சு கால்பந்து விளையாட்டின் கதாநாயக னாகத் திகழும் ஒருவர் கூறியிருக்கிறார். 'நாங்கள் உங்களது நன்மைகளைத் தேடி ஓடிவரவில்லை, உங்களது குண்டுவீச்சிலிருந்து தப்பித்தே ஓடிவரு கிறோம்' என்று தங்களது தாய்நாட்டிலிருந்து ஓடிவரு வதற்கு அமெரிக்கா ஊக்குவிக்கும் உள்நாட்டுப் போர்தான் காரணம் என்று குறிப்பிட்டு ஒரு சிரியா அகதி கூறியுள்ளார். புலம்பெயர்ந்து அகதிகளாக வருபவர்களை ஏற்றுக்கொள்வதில் 'தாராளமாக' இருப்பதுபோல் ஐரோப்பிய நாடுகள் தங்களை முன்னிறுத்திக்கொண்டாலும் உண்மை என்ன வென்றால் தங்களது லாபத்தை உச்சபட்சமாக்கு வதற்காக இந்த வீடற்ற துரத்தப்பட்ட மக்களை தங்களது மலிவுத் தொழிலாளர்களாக பயன் படுத்திக் கொள்வர். புலம் பெயர்ந்தவர்கள் 'விலங்குகளைப் போல்' நடத்தப்படுவதாகவும், செர்பிய எல்லை அருகே உள்ள ஹங்கேரி முகாமில் உணவுப் பொட்டலங்கள் வீசி எறியப்படும் காட்சிகள் வெளியாகியுள்ளன. மனதை உருக்கும் கோரமான இந்த சம்பவங்கள் 'ஆப்பிரிக்கா' என்ற ரவீந்திரநாத் தாகூரின் புகழ்பெற்ற கவிதையில் கூறப்பட்ட பின்வரும் இறவா வரிகளை நினைவு படுத்துகின்றன:

'வெட்கக்கேடான குரூரத்தில் நாகரீகத்தின்
நாகரீகமற்ற பேராசை நின்று மறைகின்றன
பனிபடர்ந்த காடுகளினூடே உங்கள் வார்த்தை
களற்ற அழுகுரல்,
உனது தூசிகளுக்குள் ரத்தமும் அழுகைகளும்
கலந்துவிட்டன
பேய்க் காலின் ஆணி செருப்பில் மிதிபட்டு
கோரமான களிமண் புடைத்து
உனது அவமதிக்கப்பட்ட வரலாற்றில்
காலத்திற்கும் அழியா அடையாளங்களை விட்டுச்
செல்லும்'

ஆக புலம்பெயர்ந்துவரும் மக்களை உடனடி யாக மீள்குடியேற்றம் செய்யவேண்டும் என்று வலியுறுத்தும் அதேவேளையில் அவர்களுக்குத் தேவையான அனைத்துவிதமான மனிதாபிமான உதவிகளையும் செய்வதோடு உலகளாவிய ஏகாதி பத்திய எதிர்ப்பு குறிப்பாக அமெரிக்க ஏகாதி பத்தியத்திற்கு எதிரான ஒன்றுபட்ட நன்கு இணைக்கப்பட்ட உக்கிரமான அமைதிப் போராட் டங்களை சரியான புரட்சிகரத் தலைமையின் கீழ் ஒவ்வொரு நாடுகளிலும் அலை அலையென கிளர்ந்தெழச் செய்யாமல் இந்த மரண ஊர்வலங் களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது என்று அமைதியை நேசிக்கும் ஜனநாயக எண்ணம் கொண்ட அனைத்து மக்களையும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

# தோழர் தனபால் அவர்களுக்கு செவ்வணக்கம் !



எமது கட்சியின் திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு கிளையின் மூத்த உறுப்பினர் தோழர் P தனபால் **(56)** அவர்கள் **13.9.2015** அன்று அதிகாலை **2** மணிக்கு மாரடைப்பால் மரணமடைந்தார். கடந்த **6** வருடகாலமாக அவருக்கு நீரழிவு நோய் இருந்தது. ஏற்கெனவே **15** நாட்களுக்குமுன்பு மாரடைப்பு ஏற்பட்டது. மதுரையில் ECG, ECO மற்றும் ஆன்ஜியோ கிராம் எடுக்கப்பட்டது. இந்த பரிசோதனையில் **15** நாட்களுக்குள் பை–பாஸ் சர்ஜரி செய்ய டாக்டரால் அறிவுறுத்தப்பட்டது. இரண்டாவது முறையாக ஏற்பட்ட மாரடைப்பால் காலமானார். அவரின் இந்த அகால மரணம் குடும்பத்திற்கும் கட்சிக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

தோழர் தனபால் அவர்கள் **1984**ஆம் வருடம் நிலக்கோட்டை தாலூக்காவில் **20** கிராமங் களை உள்ளடக்கிய பஸ் போராட்டத்தின் வெற்றிக்குப் பாடுபட்டார். பின்பு, வத்தல குண்டு நகர அடிப்படை வசதிகளுக்கான போராட்டத்திலும் நிலக்கோட்டை சட்டமன்றம், திண்டுக்கல் பாராளுமன்ற தேர்தல் வேலை களிலும் கட்சி இன்றுவரை எடுத்த போராட்டங் களிலும் கலந்துகொண்டார்.

**20.9.2015** அன்று வத்தலகுண்டில் எமது கட்சியின் சார்பாக அஞ்சலிக் கூட்டம் நடை பெற்றது. **1** நிமிட மௌன அஞ்சலி அனுஷ்டிக்கப் பட்டது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்துத் தோழர்களும் மலரஞ்சலி செலுத்தினர். தோழர் உதயன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவட்ட கமிட்டி உறுப்பினர் களும் வந்திருந்த அனைத்து தோழர்களும் நினைவுகூர்ந்து பேசினர்.

இறுதியாக உரையாற்றிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் ரெங்கசாமி அவர்கள் தனது உரையில் "துக்கத்தையும் உணர்ச்சியையும் வெளிக்காட்டு வதென்பது கட்சி கடமைகளை மேலும் உறுதி யுடன் தொடர்ந்து செய்வதில்தான் உள்ளது. அதுவே இறந்த தோழருக்கு செய்யும் அஞ்சலியும் மரியாதையும் ஆகும். மேலும் துக்கத்தை மனதில் கொள்வதற்கு அர்த்தமு மாகும்" என கூறினார்.

தோழர் சிப்தாஸ் கோஷ் மீதான பாடலுடன் கூட்டம் நிறைவுற்றது.

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 28th October 2015

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# இந்திய–பாகிஸ்தானிய மக்களுக்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஓர் அறைகூவல்

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் செப் 9, 2015 அன்று வெளியிட்ட அறிக்கை:*

இந்திய–பாகிஸ்தானிய எல்லையில் குறிப்பாக காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதிகளில் தீவிரவாத நடவடிக்கைகளின் பிரச்சினைகள் அதிகரித்து வரும்போது, நட்புரீதியாக பிரச்சினையைத் தணிப்பதற்கு பருண்மையான சாதகமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பதிலாக, எல்லைப் பிராந்தியங்களில் பதட்டத்தை அதிகரிக்கும் வண்ணம் இவ்விரு பூர்ஷ்வா அரசாங்கங்களும் குற்றச்சாட்டு மற்றும் எதிர்க்குற்றச்சாட்டுகளில் ஈடுபடுவதுடன் இருநாட்டு ராணுவங்களும் தங்களுக்கிடையில் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபடுவதைக்கண்டு நாங்கள் மிகவும் கவலையுறுகிறோம். இவ்வனைத்து முயற்சிகளும் போர்போன்ற சூழ்நிலையை உருவாக்குகின்றன.

கொடூர முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கெதிராக எந்தவொரு முதலாளித்துவ – ஏகாதிபத்திய நாட்டின் அனைத்துபகுதி மக்களிடமும் கோபமும் அதிருப்தியும் அதிகரித்துவரும்போது, வாழ்வின் எரியும் பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தை தடம்புரளச்செய்ய போர் பீதியையும் எல்லைப் பதற்றத்தையும் உருவாக்கி, அத்துன்பப்படும் மக்களின் கவனத்தை திசைதிருப்ப ஆட்சியாளர்கள் முயல்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். இவ்விரு இரக்கமற்ற சுரண்டல் முதலாளித்துவ ஆட்சியாளர்களும் அதே வழியை பின்தொடர்கிறார்கள். இவ்விரு நாடுகளின் உழைக்கும் மக்களிடையே அதிருப்தியை உருவாக்க திட்டம் தீட்டி, அதன் மூலம் அனைத்துத் துன்பத்திற்கும் ஏழ்மைக்கும், மக்கள் வாழ்வில் ஏற்படும் ஏமாற்றத்திற்கும் மூலகாரணமான சுரண்டல் முதலாளித்துவ அமைப்பை மூடிமறைக்கிறார்கள்.

சட்டபூர்வமாகவும் சர்ச்சைக்கிடமற்ற வகையிலும் காஷ்மீர் இந்தியாவின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தபோதிலும், நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்துவரும் அரசியல் பிரச்சினையான இப்பிரச்சினை சாத்தியமானவரையிலும் மிக விரைவாக நட்புறவான சூழ்நிலையில் எவ்விதத்திலும் விஷயத்தைக் குழப்பாமல், மக்களிடத்தில் வெறுப்புணர்வைத் தூண்டாமல், போர் மூளுவது போன்ற தோற்றத்தையும் மனநிலையையும் உருவாக்காமல் உரிய பேச்சுவார்த்தைகளின் மூலமாகத் தீர்க்கப்படவேண்டியது அவசியமாகும் என்ற நிலைப்பாட்டையே காஷ்மீர் பிரச்சினையில் தொடர்ந்து நாம் வலியுறுத்திவருகிறோம்.

காஷ்மீர் மக்களின் ஏகோபித்த தலைவராயிருந்த ஷேக் அப்துல்லா அவர்களின் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஷரத்துக்களான காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து, தன்னாட்சி மற்றும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் வாழும் மக்கள் தங்களின் கலாச்சாரம் பாரம்பரியம் ஆகியனவற்றுக்குப் பொருந்துகிறவகையில் தங்களுக்கான ஒரு அரசை அமைத்துக்கொள்ள தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் இந்திய யூனியன் வழங்கும் என்பன போன்ற ஒப்பந்தத்தின் நியமங்கள் உரியமுறையில் கூட்டாட்சியின் மரபை உயர்த்திபிடித்து, அமைப்புச் சட்டத்தின் 370வது பிரிவை மதித்து, அவர்களின் சிறப்பு அந்தஸ்த்து உரிமைக்கு ஒப்புதல் வழங்கியிருப்பார்களேயானால் இந்த பிரச்சினைகள் அனைத்தையும் தவிர்த்திருக்கலாம், தீவிரவாதம் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டிருக்கலாம். காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் தலையிட்டு குழப்பம் விளைவிக்க ஒருபோதும் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது.

தங்களின் ஆட்சியாளர்களுடைய இந்த கொடிய விளையாட்டை புரிந்துகொள்ளுமாறும், அவர்களுடைய பேரழிவு திட்டத்திற்கும் உள்நோக்கங்கொண்ட பிரச்சாரத்திற்கும் பலியாகிவிட வேண்டாமெனவும், தங்களுடைய பிற்போக்கு ஆட்சியை பாதுகாத்துக்கொள்ள ஒடுக்குமுறை முதலாளித்துவ ஆட்சியாளர்களின் விருப்பமான மக்களிடையே பிரிவினையை உருவாக்கக்கூடிய எதையும் செய்துவிட வேண்டாமெனவும், தங்களுடைய ஆட்சியாளர்களுடைய தீய உள்நோக்கங்கொண்ட இவ்வனைத்து திட்டங்களுக்கும் எதிராக சக்திவாய்ந்த ஜனநாயகப் போராட்டங்களை வலுப்படுத்த தங்கள் அணிகளை நெருக்கிக்கொள்ளுமாறும் இவ்விரு நாடுகளையும் சார்ந்த உழைக்கும் மக்களுக்கு நாங்கள் அறைகூவல் விடுக்கிறோம்.

# கல்விப் பாடத்திட்டங்களில் கீதை, ராமாயணம், மகாபாரதத்தின் போதனைகளையும் ஆன்மீக மதிப்புக்களையும் கற்பிக்கும் பாஜக அரசாங்கத்தின் ஜனநாயக விரோத, கல்வி விரோத முன்மொழிவுகளை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கடுமையாக எதிர்க்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் செப் 13, 2015 அன்று வெளியிட்ட அறிக்கை:*

மிச்சம் மீதமிருக்கும் மதசார்பின்மையையும் துடைத்தெறியவும் கல்வியை வகுப்புவாதமயமாக்கும் காவிமயமாக்கும் கொடிய திட்டத்துடன் ஒத்திசைந்த மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட மகாபாரதம், ராமாயணம், பகவத்கீதையின் போதனைகளையும் மற்றும் பிற ஆன்மீக மதிப்புக்களையும் பள்ளி–கல்லூரிகளின் பாடத் திட்டத்தில் புகுத்தும் பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கத்தின் மிகுந்த ஆட்சேபணைக்குரிய முன்மொழிவை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். கற்பனைகளையும் மதத்தையும் கல்வித்திட்டத்தில் ஒன்றிணைக்கும் இத்திட்டமானது இந்திய மறுமலர்ச்சியின் முன்னோடிகள் மிக தீவிரமாகப் பற்றியிருந்த மற்றும் இன்றைய சரியாக சிந்திக்கும் ஜனநாயக எண்ணங்கொண்ட கல்வியாளர்கள், பல்கலைக்கழக அறிஞர்கள், அறிவுஜீவிகள் உறுதியுடன் ஆதரிக்கும் மதசார்பற்ற, விஞ்ஞான பூர்வ, ஜனநாயகபூர்வ மற்றும் அனைவருக்கும் சமமான கல்வியின் கோட்பாடுகளுக்கு எதிராக மிகத்தெளிவாக நிற்கிறது.

'நாட்டிலிருந்து கலாச்சார மாசுபடுதலை நீக்குதல், இளநெஞ்சங்களிடையே மதிப்பு'க்களை விதைத்தல் எனும்பெயரில் பகுத்தறிவு சிந்தனைப் போக்கை மழுங்கடிக்கவும் மதப் புத்துயிர்ப்பு மற்றும் அறிவுக்கு புறம்பான பழைய சிந்தனைகளை உருவாக்குவதாகவும் குருட்டு நம்பிக்கையையும் மாயாவாதத்தில் இளைஞர்களின் மனஇயல்பை வடிவமைக்கவுமான முயற்சியே இது என்பது மிகவும் தெளிவாகிறது.

கல்வி மீதான இத்தாக்குதலை எதிர்க்கவும் இக்கொடிய முன்மொழிவை திரும்பப்பெற அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் சக்திவாய்ந்த போராட்டத்தை வளர்த்தெடுக்கவும் நல்லெண்ணங்கொண்ட குடிமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள், துணை வேந்தர்கள், கல்வி வளாகங்களுடன் தொடர்புகொண்ட முக்கிய பிரமுகர்கள் அதேபோல் அனைத்துபகுதி உழைக்கும் மக்களையும் நாங்கள் அறைகூவி அழைக்கிறோம்.

# செப்டம்பர் 12 பாரதியார் 94வது நினைவு தினம்



தேனியில் பாரதியின் பதாகைகளை கையில் ஏந்திக் கொண்டு பாரதியின் வேடம் அணிந்து ஊர்வலமாகச் செல்லும் பள்ளி மாணவர்கள்






சென்னையில் ஏஐஎம்எஸ்எஸ், ஏஐடிஒய்ஓ, ஏஐடிஎஸ்ஓ சார்பில் செப் 12, 2015 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தல் தோழர் செபஸ்டின் , மாவட்ட செயலாளர், ஏஐடிஒய்ஓ தலைமை உரையாற்றுகிறார், முன்னதாக மெட்ராஸ் யூத் காயர் சேர்ந்திசை குழுவால் பாரதியார் பாடல்கள் இசைக்கப்பட்டது. மதுரை, விழுப்புரம், நெய்வேலிலும் கூட்டங்கள் நடைபெற்றன.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org